# புதிய மாற்றங்கள்!

புதிய ஆண்டு, புதிய மாதம், புதிய நாள், புதிய ஆரம்பம், புதிய எதிர்பார்ப்புக்கள்! இப்படியாக இந்நாளிலே மனிதர்கள் நன்மைக்கு வழி வகுக்கும் புதிய தீர்மானங்களை தங்கள் வாழ்விலே எடுத்துக் கொள் கின்றார்கள். ஆண்டவர் இயேசுவை அறிந்தவர்கள் மட்டுமல்ல, அவரை அறியாதவர்களும் கூட, கடந்த ஆண்டிலே தங்கள் வியாபாரத்தில், கல் வியில், வேலையில், குடும்பத்தில் தாங்கள் அடைய வேண்டிய பல னை அடைய முடியாதபடிக்கு இட றலாய் நிறுத்திய காரணங்க ளை கண்டறிந்து, தங்கள் கட்டுப்பாட் டிற்குள் இருக்கும் தடையான கார ணிகளை மாற்றும்படி பிரயாசப்ப டுகின்றார்கள். நல்லோர் மேலும், தீயோர் மேலும் கிருபையை பொழி யப் பண்ணுகின்ற பிதாவாகிய தேவனானவர், மனிதர்களின் கரத்தின் கிரியைகளின் பலனை அவனவனுக்கு கொடுக்கின்றார். எடுத்துக்காட் டாக, தன் வயலை உழுது, விதைவிதைத்து, தன் முதலீட்டை இரவும் பகலுமாக பராமரித்து வரும் விவசாயியானவனுக்கு அவனுடைய கர த்தின் கிரியையின் பலனை அருள் செய்கின்றார். இப்படியாக மனித ர்கள் இந்த உலகத்தின் காரியங்களுக்காக அதிகமாக பிரயாசப்படுகின் றார்கள். அழிந்துபோகிற போஜனத்திற்காக அல்ல, நித்தியஜீவன்வரை க்கும் நிலைநிற்கிற போஜனத்திற்காகவே கிரியை நட ப்பியுங்கள் என்று கூறிய ஆண்டவராகிய இயேசுதாமே, அந்த ஜீவ போஜனத்தை நமக்கு கொடுத்திருக்கின்றார். நித்திய ஜீவனுக்கென்ற அழைப்பை பெற்ற நாம், ஆண்டவராகிய இயேசு நமக்கு விட்டுச்சென்ற சமாதானமான வாழ்க்கை யை கெடுக்கும் ஆகாத சுபாவங்களை கண்டறிந்து, அவைகளை விட் டுவிட வேண்டும். எந்த மனிதனானவனும் தன் வாழ்க்கையிலே ஒரு நன் மையான மாற்றத்தை உண்டுபண்ணுவதற்கு, மனமாற்றமானது அடித்தள மானதாக இருக்கின்றது. மனித வாழ்விலுள்ள சில ஆகாத சுபாவங்களை மனித முயற்சியினாலே மாற்றிவிட முடியாது. நமக்கு புதிய வாழ்வை தந்த தேவனானவரே, நமக்கு காலை தோறும் புதிய கிரு பையை பொழிகின்றார். இந்த கிருபையின் நாட்களிலே, கருத்தோடு வேதத்தை தியானித்து, ஊக்கமாக ஜெபம் பண்ணுங்கள். கர்த்தருடைய வேதம், கன்மலை போன்ற கடினமான இருதயங்களை நொறுக்கும் சம்மட்டி யைப்போல் இருக்கின்றது. ஜீவனுள்ள வார்த்தைகள் உங்களில் கிரியைகளை நடப்பிக்குப்படி இடங்கொடுங்கள். தூய ஆவியானவர் தாமே இந்த ஆண்டிலே உங்களை பெலப்படுத்தி நடத்தி செல்வாராக.

**யோவான் 6:63**

**நான் உங்களுக்குச் சொல்லுகிற வசனங்கள் ஆவியாயும் ஜீவனாயும் இருக்கிறது.**

**ஜெபம்:** சகல சத்தியத்திலும் நம்மை வழிநடத்தும் உம்முடைய ஆவியானவரை நமக்கு தந்த தேவனே, இந்த ஆண்டிலே நான் இன்னுமதிகமாக உம்மை கிட்டிச் சேர எனக்கு உணர்வுள்ள இருதயத்தை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# தவறிப்போன இடங்கள்

**நீதிமொழிகள் 6:23**

**கட்டளையே விளக்கு, வேதமே வெளிச்சம், போதகசிட்சையே ஜீவ வழி.**

ஒரு கிராமத்திலே வசித்து வந்த குடியானவன், வாரந்தோறும் அதிகாலையிலே இருட்டோடு எழுந்து, தன் தோட்டத்தின் காய்கறிகளை தன் மாட்டு வண்டிலிலே ஏற்றிக் கொண்டு, சந்தைக்கு செல்வது வழக்கமாக இருந்தது. சந்தைக்கு செல்லும் வழியானது சீரற்றதும், பள்ளந்திட்டியுமானதும், வனவிலங்குகளின் நடமாட்டமுள்ளதாகவும்இருந்தது.மழை நாட்களிலே, அங்காங்கே சேறும் சகதியுமாக காணப்படும். அதனால், அவனுன் செல்லும் வண்டிலின் சில்லானது, பள் ளங்களிலே அகப்பட்டு விடுவதுண்டு. அவன் கொண்டு செல்லும் சில காய்கறிகளும் அநேனமாக வழியிலே விழுந்து விடும். அதுமட்டுமல்லாமல், அந்த நேரத்திலே அவனுக்கு உதவி செய்வதற்கு அங்கே யாரும் இல்லா திருந்ததினாலும், அவன் நேரம் தாழ்த்தி சந்தைக்கு செல்வதாலும், அவனுடைய பிரயாசத்தின் பலன் மிகவும் அற்பமாகவே இருந்தது. ஒரு நாள் அவனுடையநண்பனானவன்,அவனுடையநிலைமையை அறிந்து, அவன் வண்டிலிலே போடுவதற்கு ஒரு விளக்கை வாங்கிக் கொடுத் தான். அந்த விளக்கின் வெளிச்சத்தினாலே அவன் வண்டிலானது பாதையிலே இடறாதபடிக்கு, ஒழுங்காக ஓட்டிச் சென்றான். ஆம், பிரியமானவர்களே, இந்த கோணலும் மாறுபாடானதுமான உலகத்திலே, நிலையான பரலோகத்தை நாடி நாம் சென்று கொண்டிருக்கின்றோம். இந்த உலகத்திலே இருள் சூழ்ந்திருந்திருக்கின்றது. அதனால், நாம் இடறி விழுவதற்கு சந்தர்ப்பங்கள் அநேகமுண்டு. கடந்த ஆண்டிலே நாம் கடந்து வந்த பாதையை திரும்பிப் பார்த்து, நாம் தவறிய இடங்களை ஆராய்ந்தறிய வேண்டும். விழுந்த இடத்திலிருந்து நாம் எழுந்திருக்க வேண்டும். நாம் கர்த்தருடைய வேதத்தை கைக்கொள்ள தவிறிய இடங்களே நாம் இடறி விழுந்த இடங்கள். "பொழுதுவிடிந்து விடிவெள்ளி உங்கள் இருதயங்களில் உதிக்குமளவும் இருளுள்ள ஸ்தலத்தில் பிரகாசிக்கிற விளக்கைப்போன்ற, தேவன் முன்னுரைத்துக் கூறிய, வார்த்தைகளை கவனித்திருப்பது நலமாயிருக்கும்." கிராமத்திலே வசித்து வந்த அந்தக் குடியானவனின் பிரயாசம் பெரிது. அவனுடைய செயற்பாடுகளில் தவறேதும் இருக்கவில்லை. அவன் நோக்கம் சிறப்பானது ஆனா லும், பாதையிலே கிடக்கும் பாதகங்களை கண்டறிய அவனுக்கு விள க்கு தேவைப்பட்டது. கர்த்தருடைய வசனமே நம் கால்களுக்குத் தீப மும், நாம் செல்லும் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது. அவைகளை கைகொள்ளுகின்றவர்களுக்கோ மிகுந்த பலன் உண்டு.

**ஜெபம்**: வழிகாட்டும் தீபமான ஜீவ வசனங்களை எனக்கு தந்த தேவனே, நான் என் சுய அறிவினாலே காரியங்களை முன்னெடுத்துச் செல்லாமல், உம் வார்த்தையின் வழியிலே வாழ எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# தேவ சித்தம் நிறைவேற இடங்கொடுங்கள்

**எபிரெயர் 10:36**

**நீங்கள் தேவனுடைய சித்தத்தின்படி செய்து, வாக்குத்தத்தம்பண்ணப்பட்டதைப் பெறும்படிக்குப் பொறுமை உங்களுக்கு வேண்டியதாயிருக்கிறது.**

பேச்சுப் போட்டிகளிலும், பட்டிமன்றங்களிலேயும் விவாதம் செய்வதிலும் சிறந்து விளங்கிய மனிதனானவனொருவன், தன் ஊரிலுள்ள சனசமூக நிலையமொன்றிலே இணைந்து கொண்டான். சில மாதங்களின் பின்னர், அந்த சனசமூக நிலையத்தின் உறுப்பினர்கள், "இவன் பொறுத்த கேள்விகளை கேட்பதிலே மிகவும் சமார்த்தியமுள்ளவன், எனவே இவனை நாங்கள் நிலையத்தின் நிர்வாக உறுப்பினராக தெரிந்து கொள்ள வேண்டும்" என்று தங்களுக்குள்ளே பேசி, அந்த ஆண்டில் நிர்வாக தேர்தலிலே அவனுக்கு வாக்களித்து அவனைத் தெரிந்து கொண் டார்கள். தான் எதிர்வாதம் பேசிவதில் வல்லவன் என்ற எண்ணமும், மக்களின் எதிர்பார்ப்பை தான் எப்படியும் நிறைவேற்ற வேண்டும் என்ற வித்தும் அவன் இருயத்திலே விழுந்து முளைக்க ஆரம்பித்தது. அதனால், பல ஆண்டு காலமாக, சனசமூக நிலையத்தில் சீராக நடந்த வந்த கூட்டங்களிலே அநேக குழப்பங்களும், எதிர்வாதங்களும் ஏற்பட்டது. அந்த மனிதனானவன் பட்டிமன்றங்களுக்கு ஏற்றவன் என்பது உண்மை, ஆனால் ஊரின் நலனுக்கான காரியங்களை நிறைவேற்றி முடிபதிலோ, பெரும் இடறல் கல்லாக, தான் இருக்கின்றேன் என்பதை அவன் உணராமல் வாழ்ந்து வந்தான். நித்திய ஜீவனுக்கென்று அழைப்பை பெற்ற சகோதர சகோதரிகளே, அந்த மனிதனானவன் தன்னிடமிருந்த திறமையை, தன் சொந்த எண்ணங்களையும், ஊர் மக்கள் தன்னை குறித்து வைத்த அபிப்பிராயத்தையும் நிறைவேற்றும்படியாக உபயோகித்தானே தவிர, நல்ல காரியங்களுக்காக அதை உபயோகிக்கவில்லை. இன்று சபைகளிலும், இப்படியான சில மனிதர்கள், ஒருசில கலகக்காரின் உந்துதலினால், தாங்கள் யாருக்கும் பயப்படாத வீரர்கள் என்ற பிரகாரம் கர்த்தருடைய சபையிலே நடந்து கொள்கின்றார்கள். இப்படிப்ப ட்டவர்கள், தங்கள் சொந்த இச்சைகளை நிறைவேற்றி, தங்களுக்கு ஆதரவானவர்களின் சித்தப்படி வாழ்ந்து வருகின்றார்கள். நாமோ அப்படியிருக்கலாகாது, நாம் உன்னதமான அழைப்பை பெற்றிருக்கின்றோம். பிதவாகிய தேவனுடைய சித்தமானது பரலோகத்திலே செய்யப்படுவது போல, இந்த பூவுலகத்திலும் செய்யப்படும்படியாக நாம் தெரிந்து கொள்ளப்பட்டிருக்கின்றோம். எனவே, நாம் நம்முடைய சொந்த எண்ணங்களுக்கும், மற்றவர்களின் தவறான உந்துதலுக்கும் இடங் கொடாமல், தேவ வார்த்தை நம்மிலே நிறைவேற இடங் கொடுப்போமாக.

**ஜெபம்**: என் தேவனாகிய கர்த்தாவே, நீர் வாக்குத்தத்தம் பண்ணினதை நான் பெற்றுக் கொள்வதையே என் இலக்காக வைத்து, உம்முடைய சித்தத்தை நிறைவேற்றுவதில் உறுதியாய் நிலைத்திருக்க பெலன் தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# யாரோடு உங்கள் போராட்டம்?

மல்யுத்தத்திலே நன்றாக பயிற்றுவிக்கப்பட்டு, தேர்ச்சியடைந்த வீரனான வனொருவன், தேசிய மல்யுத்த பந்தைய போட்டியிலே முதலிடம் பெற்று, மிகவும் பிரபல்யமானவனாக இருந்து வந்தான். ஒரு நாள் அவனுடைய சகோதரனானவன் குடித்து வெறிகொண்டவனாக வீடு திரும்பினான். அதைக் கண்ட அந்த வீரனானவன், தன் சகோதரனை நோக்கி: நீ ஏன் இப்படி உன் வாழ்க்கையை கெடுத்துக் கொள்கின்றாய் என்று அவனுக்கு புத்திமதி கூறினான். வெறிகொண்டவனோ, கோபம் மூண்டவனாக, மல்யுத்த வீரனாகிய தன் சகோதரனை நோக்கி: நீ யார் எனக்கு புத்தி மதி கூற, என்று அவனை அடிக்கும்படியாக சென்றான். அந்த மல்யுத்த வீரனோ, அவனை மறித்து, தடுத்து நிறுதித்தி விட்டு, கலக மேதுமின்று அவ்விடத்தைவிட்டுச் சென்றான். அவனுடைய நண்பன், அவனை நோக்கி: நீ ஏன் அவனை விட்டு வைத்தாய், நீ மல்யுத்த வீர னல்லவோ என்று கேட்டான். அதற்கு அவன் மறுமொழியாக: நண்பா, மல்யுத்தப் போட்டி, என்னை எதிர்த்து போராடும் என் எதிரிகளோடு மட்டுமே, என் சகோதரனோடு அல்ல. அதுமட்டுமல்ல, அவன் வெறி கொண்டு, தான் செய்வது இன்னது என்று உணராதிருக்கின்றான் என்று கூறினான். சேனைகளின் கர்த்தராகிய இயேசுவின் போர்சேவகர்களாக அழைப்பைபெற்ற சகோதர சகோதரிகளே, நம்முடைய யுத்தம் யாரோடு என்பதை குறித்து மிகவும் தெளிவாக அறிந்து கொள்ளுங்கள். "ஏனெனில், மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு." சர்வ வல்லவராக, பரலோகத்திலே வாசம் செய்த, கர்த்தரானவர், தாழ்மைக் கோலமெடுத்து, இந்த பூவுலகிற்கு வந்தார். "அவர் சொல்ல ஆகும், அவர் கட்டளையிட நிற்கும்" அப்படியிருந்தும், பரியாசம்பண்ணப்பட்டு, அடிக்கப்பட்டு, துன்புறுத்தப்படும் போதும், சர்வ வல்லவரான இயேசு நிந்தையையும், அவமானத்தையும் சகித்துக் கொண்டு, பிதாவானவரின் திருசித்தம் தன்னில் நிறைவேறும்படிக்கு மௌனமாக இருந்தார். பிரியமானவர்களே, ஒருவன் தேவனுடைய வார்த்தைக்கு எதிர்த்து நிற்கின்றவானாக இருந்தால், அவன் யாருக்கு ஊழியம் செய்பவனாக இருப்பான் என்று சிந்தித்துப் பாருங்கள். மற்றயவர்களுடைய குறைவிலே உங்கள் ஆவியின் நிறைவை வெளிக்காட்டுங்கள். தேவனுக்கு கீழ்படிந்திருங்கள். பிசாசானவனுக்கு எதிர்த்து நில்லுங்கள்.

**யாக்கோபு 4:7**

**பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள், அப்பொழுது அவன் உங்களைவிட்டு ஓடிப்போவான்.**

**ஜெபம்**: நீடிய பொறுமையுள்ள தேவனே, எந்த சூழ்நிலையிலும் நான் மாம்ச இச்சைக்கு இடங்கொடுத்து, கலகங்களை ஏற்படுத்தாதபடிக்கு உம் வார்த்தையின்படி சூழ்நிலைகளை மேற்கொள்ள என்னை நடத்திச் செல்வீராக. இரட்சகர்இயேசுவழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# கர்த்தருடைய வேளைக்காக காத்திருங்கள்

நான் யாருக்கும் தீமை செய்ததில்லை. நான் அறிய ஒரு அநியாயமும் செய்ததில்லை. அப்படியிருந்தும் ஏன், என்னுடைய வாழ்க்கையிலே என் உழைப்பின் பிரயாசத்தை காணமுடியவில்லை என்று ஒரு விசுவாசி யானவன் நொந்து கொண்டான். இத்தகைய அனுபவங்களை நீங்கள் எதிர்நோக்கியிருக்கலாம் அல்லது வருங்காலங்களிலே எதிர்நோக்கும் சந்தர்ப்பங்கள் நேரிடலாம்.ஒரு சமயம், ஆண் டவராகிய இயேசு போதகம் பண்ணி முடித்தபின்பு சீமோ னை நோக்கி: ஆழத்திலே தள்ளிக்கொண்டுபோய், மீன்பிடிக்கும்படி உங்கள் வலைகளைப் போடு ங்கள் என்றார். அதற்குச் சீமோன் பேதுரு: ஐயரே, இராமுழு வதும் நாங்கள் பிரயாசப்பட்டும் ஒன்றும் அகப்படவில்லை. ஆகிலும் உம்மு டைய வார்த்தையின்படியே வலையைப் போடுகிறேன் என்றான். அந்தப் படியே அவர்கள் செய்து, தங்கள் வலை கிழிந்துபோகத்தக்கதாக மிகுதியான மீன்களைப் பிடித்தார்கள். அப்பொழுது மற்றப் படவி லிருந்த கூட்டாளிகள் வந்து தங்களுக்கு உதவிசெய்யும்படிக்குச் சைகை காட்டினார்கள் அவர்கள் வந்து, இரண்டு படவுகளும் அமிழத்தக்கதாக நிரப்பினார்கள். ஆம் பிரியமான சகோதர சகோதரிகளே, சில வேளை களிலே விசுவாசிகளாகிய நாமும் நீதியான முறையிலே பிரயாசப்பட்டும் பலனை காணது போகும் போது, சோர்வடைந்து விடுகின்றோம். அப்ப டிப்பட்ட வேளைகளிலே, சோர்ந்து போகாமல், பெலவீனத்திலே விசுவா சத்திற்கு விரோதமான வார்த்தைகளை அறிக்கையிடாமல், கர்த்தரு டைய பாதத்திலே பொறுமையோடு அவருடைய வேளைக்காக காத்தி ருங்க வேண்டும். இந்த உலகத்தின் போக்கிலே வாழ்பவர்கள் பலவித மான யுத்திகளை கையாளுகின்றார்கள். அவை யாவும் தவறானவைகள் என்று கூறிவிடமுடியாது. எல்லா காலமும், பருவமும், நேரமும், வழி களும் அவர்களுக்கு ஏற்புடையதாயிருக்கும் ஆனால் "நீங்கள் உங்களு டையவர்களல்லவென்றும் கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்கள் என்பதை யும் அறியீர்களா". கர்த்தர் தம்முடையவர்களை அறிவார். அவர் தம்மு டையவர்களுக்கென்று ஒரு வழியை ஆயத்தப்படுத்தியிருக்கின்றார். அவ ருடைய வேளை வரும் போது, அவர் காரியங்களை செம்மையாகவும் சிறப்பாகவும் செய்து முடிக்கின்றவராயிருக்கின்றார். நம்முடைய பரம பிதாவானவர், தம்முடைய பிள்ளைகளுக்கு நன்மைகளை கொடுக்கவும், அவைகள் கொடுக்கப்பட வேண்டிய வேளையையும் அறிந்திருக்கின் றார். எனவே, அவருடைய வேளைக்காக காத்திருங்கள்.

**ரோமர் 4:17**

**இல்லாதவைகளை இருக்கிறவை களைப்போல் அழைக்கிறவருமா யிரு க்கிற தேவனுக்கு முன்பாக**

**ஜெபம்**: இல்லாதவைகளை இருக்கிறவைகளைப்போல் அழைக்கின்ற தேவனே, என்னுடைய தேவைகளை முன்அறிந்து, ஏற்ற வேளையிலே யாவற்றையும் செய்து முடிக்கின்ற உம்முடைய தயவிற்காக நன்றி. இரட்சகர் இயேசு வழி யாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# நம்முடைய பிரயாசங்கள்

பொதுவாக மனிதர்கள் பிரயாசங்களையும், ஆசீர்வாதங்களையும் குறித்து பேசும் போது, பொருளாதார செழிப்பைக் குறித்தே எண்ணமுள்ளவர்களாக இருக்கின்றார்கள். இப்படிப்பட்ட பேச்சுக்கள் விசுவாசிகள் மத்தியிலும் காணப்படுகின்றது. ஆண்டவராகிய இயேசு இந்த உலகத்திலே இருந்த நாட்களிலே, அவருடைய சீஷர்களில் சிலர், இராமுழுவதும் மீன்களை பிடிப்பதற்கு பிராய சப்பட்டும் ஒன்றும் அகப்படவி ல்லை. மறுநாள் காலையிலே, ஆண்டவராகிய இயேசுதாமே வலைகளை மறுபடியும் போடும்படி கூறினார். அப்பொழுது வலைகள் கிழிந்து போகத்தக்கதாக திரளான மீன்கள் பிடிக்கப்பட்டிரந்ததைக் குறித்து நாம் நேற்றய தியானத்திலும் பார்த்தோம். இப்படியான சம்பவமானது இரண்டு தடவைகள் நடைபெற்றதாக வேதத்திலே குறிப்பிடப்பட்டுள்ளது. ஆண்டவராகிய இயேசு தாமே சீஷர்கள் எப்படி மீன்பிடிப்ப வேண்டும் என்றும், தங்கள் வியாபாரத்தை எப்படி விஸ்தாரப்படுத்துவதென்றும் காண்பிப்பதற்கா கவா இந்த உலகத்திற்கு வந்தார்? இல்லை, தன்னை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, வழியை ஏற்படுத்தும்படிக்கே அவர் இந்த உலகத்திற்கு வந்தார். அவருடைய திருப்பணியின் ஆரம்ப நாட்களிலே, இயேசு கலிலேயாக் கடலோரமாய் நடந்துபோகையில், மீன்பிடிக்கிறவர்களாயிருந்த இரண்டு சகோதரராகிய பேதுரு என்னப்பட்ட சீமோனும், அவன் சகோதரன் அந்திரேயாவும், கடலில் வலைபோட்டுக்கொண்டிருக்கிறபோது, அவர்களைக் கண்டு: என் பின்னே வாருங்கள், உங்களை மனுஷரைப் பிடிக்கிறவர்களாக்குவேன் என்றார். தேவனுடைய ஜீவ வார்த்தைகளை, தேவ பிள்ளைகளாகிய நாம் இந்த உலகத்தின் அழிந்து போகும் செழிப்பின் உபதேசதுக்கேதுவாக மாற்றாதபடிக்கு எச்சரிக்கையுள்ளவர்களாக இருக்க வேண்டும். ஆண்டவராகிய இயேசு தாமே இன்றும் அற்புத ங்கள் செய்கின்றார். அவைகளால் உண்டாகும் நன்மைகள் மேலான வைகளே. நாமோ, இந்த உலகத்தின் ஆசீர்வாதங்களைப் பற்றிக் கொள்ளாமல், அவரையே இன்னும் இறுகப்பற்றிக் கொள்கின்றவர் களாக காணப்பட வேண்டும். நித்திய வாழ்வு தரும் வசனங்கள் அவ ரிடமே உண்டு. நம் பிரயாசங்க்ள் யாவும் அழியாத பரலோக ராஜ்யத் தைக் குறித்த மேலானமைகளாகவே இருக்க வேண்டும்.

**1 கொரிந்தியர் 15:19**

**இம்மைக்காகமாத்திரம் நாம் கிறிஸ்துவின்மேல் நம்பிக் கையுள்ளவர்களாயிருந்தால், எல்லா மனுஷரைப்பார்க்கிலும் பரிதபிக்கப்படத்தக்கவர் களாயிருப்போம்.**

**ஜெபம்**: பரலோகத்தின் அழியாத பொக்கிஷங்களை தேடுங்கள் என்று கூறிய தேவனே, நித்திய வாழ்வு தரும் உம்முடைய ஜீவனுள்ள வார்த்தைகளின் மேன்மையை நான் உணர்ந்து கொள்ள எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# இடமாற்றமும் மனமாற்றமும்

ஒரு கிராமத்திலே வாழ்ந்து வந்த இரண்டு நண்பர்கள், அவர்கள் வசித்து வந்த கிராமத்திலுள்ள பாடசாலையிலே படித்து வந்தார்கள். சில ஆண்டுகளுக்கு பின்னர், அவர்களின் ஒருவனுடைய பெற்றோர், சில காரணங்களுக்காக அவனை பட்டணத்திலுள்ள பிரபல்யமான பாடசாலையொன்றிலே சேர்த்து விட்டார்கள். குறித்த ஆண்டிலே, நடைபெற்ற பொதுவான இறுதிப் பரீட்சையிலே இருவரும் விசேஷட சித்திகளுடன் தேர்ச்சி பெற்றார்கள். ஏனெனில், அவ்விருவரும் எங்கிருந்தாலும், பாடசாலையிலே ஆசிரியர்கள் கற்றுக் கொடுக்கும்போது பாடங்களை நன்றாக கவனித்து, மாலை வேளையிலும், வார இறுதி நாட்களிலும், கற்ற பாடங்களை மீள் ஆய்வு செய்து அனுதினமும் ஊக்கமாக கற்று வந்தார்கள். அதனால், இருவரும் பட்டப்படிப்புக்காக ஓரே பல்கலைக்கழகத்திலே சேர்ந்து கொண்டார்கள். நிலையான நகரமாகிய பரலோகத்தை நாடித் தேடும்படி அழைப்பை பெற்ற சகோதர சகோதரிகளே, நீங்கள் ஆராதித்து வரும் சபை பட்டணத்திலே உள்ள பாடசாலையைப் போல பிரபல்யமானதாக இருக்கலாம் அல்லது யாரும் அறியாத குக்கிராமத்திலே கூட இருக்கலாம். ஆனால், ஒரு விசுவாசியானவன், அவன் எங்கிருந்தாலும், ஆண்டவராகிய இயேசுவிலும், அவருடைய வார்த்தையிலும் நிலைத்திருந்து, பிதாவாகிய தேவனுடைய சித்தத்தை தன் வாழ்விலே நிறைவேற்ற வேண்டும். அப்படி செய்யாதவன் அவன் பட்டணத்தில் இருந்தாலும், குக்கிராமத்தில் இருந்தாலும் அவனுக்கு அதனால் வரும் பலன் இந்த உலகத்தோடு அழிந்து போய்விடும். இன்று பல காரணங்களுக்காக விசுவாசிகள் தாங்கள் சென்று ஆராதிதது வரும் ஆவிக்குரிய சபைகளை மாற்றிக் கொள்கின்றார்கள். எது சரி, எது பிழை என்பதை விமர்சிப்பது இந்த தியானத்தின் நோக்கமல்ல. ஆனால், அப்படியாக இடங்களை மாற்றிக் கொண்டவர்கள், தொடர்ந்தும் மனமாற்றமில்லாமலாதவர்களாக வாழ்ந்து வந்தால் அதனால் அவர்களுக்கு பலன் என்ன? எனவே எந்த சூழ்நிலையிலும், திருவசனத்தைக் கேட்பதுடன் விட்டுவிடாமல், நாம் அதின்படி செய்கிறவர்களாயும் இருக்க வேண்டும்.

**யாக்கோபு 1:25**

சுயாதீனப்பிரமாணமாகிய பூரணப்பிரமாணத்தை உற்றுப் பார்த்து, அதிலே நிலைத்திருக்கிறவனே கேட்கிறதை மறக்கிறவனாயிராமல், அதற்கேற்ற கிரியை செய்கிறவனாயிருந்து, தன் செய்கையில் பாக்கியவானாயிருப்பான்.

**ஜெபம்:** அன்பின் பிதாவே, எல்லா சூழ்நிலைகளிலும் நான் உம்முடைய வேதத்தில் பிரியமாயிருந்து, இரவும் பகலும் உம்முடைய வேதத்திலே தியானமாயிருக்க எனக்கு உணர்வுள்ள இருதயத்தை தந்து நடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# மேலானவைகளை இழந்துவிடாதிருங்கள்

ஒரு ஊரிலே வாழ்ந்து வந்த தாயானவள், இளம் வயதிலேயே தன் கணவனை இழந்த நிலையிலே, பல நெருக்கடிகள் மத்தியிலே தன் ஒரே மகனானவனை வளர்த்து வந்தாள். தன்னால் முடிந்த அளவிற்கு, தன் மகனானவன் கல்வி கற்பதற்கு வேண்டிய வசதிகள் யாவற்றையும் செய்து கொடுத்தாள். மகனானவனும், நன்றாக கற்று, தன் பட்டப்படிப்பை அதி விசேஷட சித்தியுடன் முடித்தான். சில ஆண்டுகள் கடந்த பின்பு, தூர தேசத்திற்கு சென்று மிகையாக உழைத்து, செழிப்பாக வாழ்வதற்கு, அவனுக்கு ஒரு அருமையான சந்தர்ப்பம் கிடைத்தது. அதை அறிந்த தாயானவள்: மகனே, நீ அந்த சந்தர்ப்பத்தை விட்டுவிடாதே, நீ அங்கு சென்று சுகமாய் இரு என்று வாழ்த்தினாள். ஆனால் மகனானவனோ: அப்படி அல்ல அம்மா, அநேக ஆண்டுகள் எனக்காக நீங்கள் வாழ்ந்து வந்தீர்கள், இப்போது உங்களுக்கு தனியே வாழ முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. நான் அங்கு சென்றால், ஒருவேளை அந்த நாட்டின் போக்கிற்கு பழக்கமுற்று விடுவேன். தூர தேசத்திற்கு சென்று, அதிக பணத்தை உங்களுக்கு அனுப்புவதைவிட, தற்போது உள்ள வேலையோடு, நான் உங்களோடு இருப்பதையே விரும்புகின்றேன். வருங்காலங்களில் சந்தர்ப்பம் ஏற்படும் போது, நாம் இருவருமாகவே அங்கே செல் வோம் என்று பதில் கூறினான். பிரியமானவர்களே, இன்றைய உல கிலே, வசதியை தேடி ஓடுவது மனிதர்கள் மத்தியிலே பரவலாக காணப்படுகின்றது. சிலர், அந்த வசதியை பெற்றுக் கொள்வதற்காக தங்கள் வாழ்வில் எதையும் இழந்துவிட ஆயத்தமுள்ளவர்களாக இருக்கின்றார்கள். சில வேளைகளிலே அவர்களை நம்பி கொடுக்கப்பட்ட பொறுப்பையும் அற்பமாக எண்ணிவிடுகின்றார்கள். இன்று இத்தகைய செயல்கள் விசுவாசிகள் மத்தியிலும் நடைபெறுவதை நாம் காணக்கூடியதாக இருக்கின்றது. இதனால், சிலர் தேவனாகிய கர்த்தர் அவர்களுக்கு கொடுத்த அருமையான சந்தர்ப்பங்களையும் அற்பமாக எண்ணிவிடுகின்றார்கள். வாழ்க்கையிலே முன்னேற்றங்களை நாடி செல்ல வேண்டிய நிலைகள் ஏற்படுவதுண்டு. ஆனால், ஏவாள், தன் கண்களின் இச்சையினாலே,தேவவார்த்தைக்கு கீழ்ப்படியாமல், தங்களுக்கு தேவன் கொடுத்த நித்திய மகிமையை இழந்து போனார்கள். அதுபோலவே, நம்முடைய வாழ்விலே தேவன் கொடுத்திருக்கும் மேன்மையானவைகளை இழந்து போகதாபடிக்கு எச்சரிக்கையுள்ளவர்களாக இருப்போமாக.

**எபேசியர் 4:1**

**நீங்கள் அழைக்கப்பட்ட அழைப்புக்குப் பாத்திரவான்களாய் நடந்து**,

**ஜெபம்**: உண்மையுள்ளவனென்று கருதி என்னை அழைத்த தேவனே, நீர் எனக்கு கொடுத்த மேன்மைகளை உணராமற்போகும்படி என் மனக் கண்கள் குருடாகாதபடிக்கு என்னை நீர் காத்து வழிநடத்தி செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

செவ்வாய் | தை 9

📖 மாலை வாசகம் – மத்தேயு 25:21

# சிறிய பொறுப்புக்கள்

ஒரு தேசத்திலே இருந்த குறிப்பிட்ட ஊரிலே வாழ்ந்து வந்த ஜனங்கள் மத்தியிலே அநியாயங்களும் அக்கிரமங்களும் பெருகிக் கொண்டிருந்தது. அந்த ஊரின் அதிகாரங்களையும்,ஆட்சியையும் குறித்த நம்பிக்கையிழந்து போன ஜனங்களில் பலர், அந்த ஊரைவிட்டே வெளியேறிக் கொண்டார்கள். அந்த ஊரிலே வாழ்ந்து வந்த மனிதனானவனொருவன், பல ஆண்டுகளாக, குறிப்பிட்ட சில தெருக்களை சுத்தப்படுத்தி பராமரிக்கும் வேலையை செய்து வந்தான். அவ்வூரிலே வாழ்ந்த ஜனங்களில் பலர், தங்கள் தங்கள் வழிகளை தெரிந்து கொண்டு, தங்களுக்கு கொடுக்கப்பட்ட பொறுப்புகளை தாங்கள் நிறைவேற்றாமல் இருப்பதை நியாயப்படுத்துவதற்கு பல காரணங்களை சுட்டிக் காட்டி, தங்கள் வேலைகளை ஏனோ தனோவென்று செய்து வந்தபோதிலும், அந்த மனிதனானவனோ, சூழ்நிலைகளைக் கண்டு மனம் தளர்ந்து போகாமல், தனக்கு கொடுக்கப்பட்ட சிறிய பொறுப்பை நிறைவேற்றுவதிலே கண்ணும் கருத்துமாக இருந்து, தன் வேலையை ஒழுங்காக செய்து வந்ததை, அந்த ஊரார் கண்டு, அவனுடைய அர்ப்பணிப்பை குறித்து ஆச்சரியப்பட்டார்கள். அந்த தேசத்தின் ராஜாவானவர், குறிப்பிட்ட அந்த ஊரிலே வாழ்ந்து வந்த, பொறுப்புள்ள அந்த எளிமையான ஊழியனை சந்திக்கும் போது, அவனை நிச்சயமாகவே மெச்சிக் கொள்வார் அல்லவா. இன்றைய உலகிலே நமக்கு கொடுக்கப்பட்ட சிறிய பொறுப்புக்ளை நிறைவேற்றமால் இருப்பதற்கு பல காரணங்களை சுட்டிக் காட்டலாம். மனிதர்கள் மத்தியிலே நம்முடைய கருத்துக்களை நியாயப்படுத்தலாம். அவற்றை ஆதரிக்க நம் சார்ப்பில் சில மனிதர்களும் இணைந்து கொள்ளலாம். ஆனால், நம்முடைய இருதயங்களை ஆராய்ந்து, நம் நினைவுகளை அறிந்த தேவன் முன்னிலையில் நாம் எந்த நியாயத்தை கூறிக் கொள்ள முடியும்? “நல்லது, உத்தமமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே, கொஞ்சத்திலே உண்மையாயிருந்தாய், அநேகத்தின்மேல் உன்னை அதி காரியாக வைப்பேன் உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி” என்ற நம்முடைய எஜமானனாகிய இயேசுவின் வார்த்தையை கேட்கு ம்படிக்கு, நாம் நமக்கு கொடுக்கப்பட்ட பொறுப்புக்களை, கருத்தோடு நிறைவேற்ற பிரயாசப் படுவோமாக. பரிசுத்த ஆவியானவர் தாமே வேண்டிய பெலத்தை தந்து வழிநடத்துவாராக.

**1 தீமோத்தேயு 1:12**

**என்னைப் பலப்படுத்துகிற நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து என்னை உண்மையுள்ளவனென்றெண்ணி, இந்த ஊழியத்திற்கு ஏற்படுத்தினபடியால், அவரை ஸ்தோத்திரிக் கிறேன்.**

**ஜெபம்:** காருண்யத்தினாலே என்னை உம்மண்டை இழுத்துக் கொண்ட தேவனே, கோணலும், மாறுபாடானதுமான உலகிலே, நீர் எனக்கு தந்த பொறுப்பை நான் நிறைவேற்றி முடிக்க என்னை பெலப்படுத்தி நடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# காலங்கள் பதில் சொல்லும்

ஒரு பண்ணை முதலாளியானவனுக்கு மூன்று குமாரர்கள் இருந்தார்கள். மூத்தவன், தன் தகப்பனானவர், பண்ணையிலே தனக்கு கொடுத்த சில வேலைகளை பொறுப்போடு செய்து வந்தான். ஒரு நாள், அவன் செய்யவேண்டிய ஒரு காரியத்தை செய்யாது போனதினாலே, பண்ணையிலே இருந்த சில ஆடுகள் நோயுற்று சோர்ந்து போயிருந்ததை கண்ட தகப்பனானவர், அவனை அழைத்து, அவனை கடிந்து கொண்டு அறிவுரை கூறினார். தப்பனானவரின் வாரத்தைகளை கேட்ட மூத்த குமாரனானவன் மனம் வருந்தி தன் தகப்பனானவரிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டான். அதை கேட்டுக் கொண்டிருந்த அவருடைய குமார்களில் இளையவன் அவரை நோக்கி: அந்த வேலைகளில் சிலவற்றை எனக்கு கொடுத்தால் அவைகளை அண்ணனைவிட நான் திறம்பட செய்து முடிப்பேன் என்று தன் தகப்பனானவரிடம் கூறிக் கொண்டான். அதை கேட்டு கோபமடைந்த தகப்பனானவர், அவனை நோக்கி: உன் பள்ளிக்கூடத்திலே, ஆசிரியர் கொடுக்கும் வீட்டு வேலைகளை நீ ஒழுங்காக செய்யாமல், ஆசிரியர்களை குறித்து குறை கூறிக் கொள்கின்றாய். உன் அம்மா, உனக்கு சொல்லும் வேலைகளை முறுமுறுப்போடு செய்து வருகின்றாய். முதலாவதாக, நீ உனக்கு கொடுக்கப்பட்ட சின்ன வேலைகளிலே கருத்தாய் இரு. உன் அண்ணனின் வேலையில் இருக்கும் சவால்களை ஒன்றையும் நீ இப்போது அறியமாட்டாய். எனவே, பெரிய ஆசனங்களில் அமர்வதற்கு முன்னதாக, அவற்றைக்குறித்து விமர்சிக்காதே என்று அவனை கடிந்து கொண்டார். பொதுவாக, தொழிற்சாலைகளிலே, உழைப்பாளிகள் தங்கள் தலைவர்களை குறித்து விமர்சித்துக் கொள்வார்கள். தாங்கள் தலைவரானால், எல்லாம் திறம்பட செய்வோம் என்று திட்டமாக கூறிக் கொள்வார்கள். இவ்வண்ணமாகவே, இன்று சபைகளிலும், சில சிறியவர்கள், பெரியவர்கள் மற்றவர்களுடைய பொறுப்புக்களை குறித்து விமர்சிப்பதிலே அதிக கவனமுள்ளவர்களாக இருக்கின்றார்கள். எப்படி ஒரு நல்ல தந்தை இருக்க வேண்டும் என்று ஒரு வாலிபனானவன் பல குறிப்புக்களை அழகாக வர்ணித்து கூறிக் கொள்ளலாம், ஆனால் அவன் ஒரு நாள் தகப்பனாக வரும்வரைக்கும் அவன் கூறிய வார்த்தைகளின் தார்ப்பரியத்தை அறியாதவனாகவே இருப்பான். எனவே, தற்போறு உங்களுக்கு கொடுக்கப்பட்ட பொறுப்புக்களை முறுமுறுப்பில்லாமல் நிறைவேற்றுங்கள்.

**பிலிப்பியர் 2:16**

**எல்லாவற்றையும் முறுமுறுப்பில்லாமலும் தர்க்கிப்பில்லாமலும் செய்யுங்கள்.**

**ஜெபம்**: அன்பின் தேவனே, நான் என்னைக் குறித்து அதிக மேன்மையாக எண்ணாமலும்;, என் கண்ணிலிருக்கும் உத்திரத்தை உணராதவன் போல, நான் வாழாதபடிக்கு எனக்கு உணர்வுள்ள இருதயத்தை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# குறைவுகளிலே நிறைவாக்குவோம்

> **2 சாமுவேல் 2:26**
>
> சாமுவேல் என்னும் பிள்ளையாண்டானோ, பெரியவனாக வளர்ந்து, கர்த்தருக்கும் மனுஷருக்கும் பிரியமாக நடந்துகொண்டான்.

ஒரு ஊரிலே அநேக வருடங்களாக ஊழியம் செய்து வந்த அனுபவமிக்க மேய்ப்பரானவர், தன்னோடு ஊழியம் செய்யும் உதவி ஊழியர்களை குறித்து மிகவும் கரிசணையுள்ளவராக இருந்து வந்தார். சில காரியங்களை இளம் ஊழியர்கள் உணர்ந்து கொள்ளும்படிக்கு சுவாரசியமான கதைகள் வழியாகவும் அவர்களோடு பேசிக் கொள்வார். ஒரு நாள், ஒரு உதவி ஊழியன் அவரிடம் வந்து, ஐயா, அந்த மற்றய ஊழியன் இப்படியான தவறான காரியத்தை செய்துவிட்டான் என்றும் அறிந்து அதை நீங்கள் பராமுகமாக விட்டிருப்பது நியாயமா என்று குழப்பத்துடன் கேட்டுக் கொண்டான். அதற்கு அந்த மேய்ப்பரானவர்: நம் சக ஊழியன் குற்றம் செய்தது உண்மை. அதை நானும் அறிந்திருக்கி ன்றேன். ஆனால், நீ மற்றவனுடைய வேலையை திருடிக் கொள்வது நியாயமா என்று கேட்டார். அதற்கு அந்த உதவி ஊழியன் ஆச்சரியத்துடன், நான் யாருடைய வேலையை திருடினேன் என்று கேட்டான். அதற்கு மேய்ப்பரானவர்: நீ குற்றம் பிடிக்கும் சாத்தனுடைய வேலையை திருடிவிட்டாயே? மகனே, உன் சக ஊழியன் குற்றம் செய்தது எனக்குத் தெரியும், அவனுடைய நிலைமை முழுவதையும் நான் உன் னுடன் கூறப்போவதுமில்லை, கூற வேண்டிய அவசியமும் இல்லை. இப்போது, நீயும் குழப்பமடைந்தால், உன் வேலைகளில் தவறினால், நம்மிடையே இருக்கும் ஒரு குறைவு இரண்டாக மாறிவிடும். நான் அவனுடைய காரியத்தைப் பார்த்துக் கொள்கின்றேன். நீ எனக்கு உதவியாக இருந்து உன் வேலைகளை தொடர்ந்து நேர்த்தியாக செய்து கொள். உன் சகோதரனுக்காக கருத்தோடு ஜெபம் செய்து கொள் என்று அந்த உதவி ஊழியனை உற்சாகப்படுத்தினார். ஏலி என்னும் ஆசரியனுடைய நாட்களிலே, அவனுடைய குமாரர்கள் மிகவும் துஷ்டர்களாக இருந்தார்கள். அவன் தேவனைப் பார்க்கிலும் துன்மார்க்கத்தில் வாழும் தன் குமாரர்களை மதித்து வந்தான் (1 சாமு 2:19). ஆனால், பிள்ளையாண்டானாகிய சாமுவேலோ, அவர்களுடைய குறைகளை நோக்கி பார்க்காமல், தேவனை நோக்கிப் பார்த்து, தேவன் குறித்த நாள்வ ரைக்கும் நீடிய பொறுமையோடு தேவவார்த்தைக்கு கீழ்படிந்திருந்தான். அதுபோலவே, நாமும் தேவனையே நோக்கிப் பார்த்து அவர் நமக்கு கொடுத்தவைகளிலே உண்மையாக நடந்து கொள்வோமாக.

**ஜெபம்:** என்னை அழைத்த தேவனே, நான் மற்றவர்களுடைய குறைகளை பார்த்து நான் குறைவுள்ளவனாகாதபடிக்கு, நீர் எனக்கு ஒப்புவித்தவைகளை கருத்தோடு நிறைவேற்ற கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# உணர்வுள்ள ஜீவியம்

ஒரு தேசத்தின் மாநகரமொன்றிலே இயங்கி வந்த பிரபல்யமான பாட சாலையிலே, கல்வி கற்பதற்காக, வருடந்தோறும் பல மாணவர்கள் தேசத்தின் பல இடங்களிலிருந்தும் விண்ணப்பிப்பது வழக்கமாயிருந் தது. எப்படியாவது தங்கள் பிள்ளைகளை அந்தப் பாடசாலையிலே சேர்த்துவிட வேண்டும் என்று பல பெற்றோர்கள் விடாமுயற்சியோடு பிரயாசப்பட்டு, தங்கள் பிள்ளைகளுக்கான அனுமதியை பெற்றுக் கொள் வார்கள். ஆனால், பாடசாலைக்கு சென்ற பின்னர், குறிப்பிட்ட சில மாணவர்களே, ஆசிரியர்கள் கற்றுக் கொடுக்கும் பாடங்களை முறைப் படி கருத்தோடு கற்று வந்தார்கள். சில பெற்றோரைப் பொறுத்தவரையில், தங்கள் பிள்ளைகள் பிரபல் யமான பாடசாலையில் படிக்கின்றார்கள் என்பது அவர்களுக்கு பெரு மையாக காணப்பட்டது. அந்தப் பாடசாலையில் கற்று கொண்ட, பாட ங்களையோ, நற்பண்புகளையோ மற்றும் ஆரோக்கியமான வாழ்க்கைக் கான வழிமுறைகள் ஒன்றையுமே பின்பற்றுவதில்லை. இப்படிப்பட்ட வர்கள் பாடசாலை நாட்கள் முடிந்த பின்னரும், கூடிப்படித்த மாண வர்களுடன் சேர்ந்து குடித்து வெறித்து பல களியாட்டங்களில் ஈடுபட்டு வரும் போதும், நான் அந்தப் பாடசாலையிலே படித்தவன் என்று பெரு மிதமாக கூறிக் கொள்வார்கள். இதனால் அவர்களுக்கு என்ன பலன்? இந்நாட்களிலே, இவ்விதமாகவே, சில விசுவாசிகளுடைய வாழ்க் கையும் காணப்படுகின்றது. நாங்கள் பிரபல்யமான சபைக்கு செல்கின் றோம் அல்லது அந்த ஊழியருடைய சபையிலே நாங்கள் அங்கத்தவ ர்கள் என்று சொல்வதிலே திருப்தியும், பெருமிதமும் அடைகின்றார்கள். ஆனால், அவர்கள் வாழ்க்கையிலே வேதம் கூறும் கனிகளை காண்பது மிகவும் அரிதாகவே காணப்படுகின்றது. இந்த உலகத்தினால் உண்டா கும் பெயரும் புகழும் நம்மை தேவ ராஜ்யத்திற்கு வழிநடத்தி செல்வதி ல்லை. இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற வேத வார்த்தையின் வழியிலே வாழ்பவனே தேவனுக்கு பிரியமுள்ள வனாக இருக்கின்றான். பிரியமானவர்களே, சத்திய வேதத்தை சுத்த மாக பேசும் ஆவிக்குரிய ஐக்கியத்திலே இணைந்து கொள்வது அவசி யமானது. ஆனால், சபையின் அங்கத்துவத்தினாலே திருப்தியடைந்து விடாமல், பிதாவாகிய தேவனுடைய சித்தம் நம்முடைய வாழ்விலே நிறைவேறு ம்படி உணர்வுள்ள வாழ்க்கை வாழ வேண்டும்.

**சங்கீதம் 1:2**

**கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து, இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்.**

**ஜெபம்:** அன்பின் பரலோக தேவனே, மற்றவர்களுடைய பெயர்களின் நிழலிலே நான் திருப்தியடையாமல், உம் வார்த்தையின் வழியிலே வாழும்படிக்கு உணர்வுள்ள இருதயத்தைத் தந்து வழிநடத்தி செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# சிறிதாக தோன்றும் குறைகள்

புதிதாக திருமணமாகிய இளம் தம்பதிகளுடைய வாழ்க்கையிலே, சில மாதங்களுக்கு பின்னர், சில கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டிருந்தது. ஆனால், கணவனுடைய வியாபரம் பெரிதாக விருத்தியடை ந்ததால், விலையுயர்ந்த வீடுகள், வாகனங்கள் மற்றும் பொருட்களும், மிகையாக அவர்களிடம் இருந்தது. உல்லாசப் பயணங்களுக்கும், பிரசித்தமான உணவுச்சாலை களிலே விருந்து கொள்வதும் வாழ்க்கையில் வழக்கமாக இருந்து வந்தது. அத னால், அவர்களுக்கிடையிலே இரு ந்த கருத்து முரண்பாடுகள் ஒரு சிறிய பாதகமற்ற மலைப்பாம்பு போலவே இருந்தது. ஆனால் ஆண்டுகள் செல்லச் செல்ல அந்த முரண்பாடுகள் வளர்ந்து பெருகி யதால், வாழ் க்கையின் பிரச்சனைகள் அவர்களுடைய கட்டுப்பாட்டிற்கு மீறி சென்று விட்டது. அதனால், பெரும் குழப்பங்களும், நஷடங்களும், அவமான வங்களும், பிரிவினைகளும், ஏற்பட்டுவிட்டது. அந்த இளம் தம்பதிகளு டைய வாழ்க்கையைப் போல, இன்று சில மனிதர்கள், உடல் ஆரோக் கியம் நன்றாவே இருக்கின்றது. காலிலே சிறிய கட்டி இருக்கின்றது. அது மிகவும் சிறியதாகவே இருக்கின்றது என்று பாராமுகமாகவிட்டு விட்டு, தங்கள் சரீரத்தின் மற்றய பகுதியிலே உண்டாயிருக்கும் ஆரோக் கியத்தில் அதிக கவனத்தை செலுத்துவருகின்றார்கள். ஆனால் அந்த சிறிய கட்டியானது வளரந்து பெரும் பாதகத்தை தங்களுக்கு ஏற்ப டுத்தலாம் என்பதை உணராமல் வாழ்ந்து விடுகின்றார்கள். பிரியமா னவர்களே, நம்முடைய தனிப்பட்ட வாழ்க்கை, குடும்ப வாழ்க்கை, சபை வாழ்க்கை போன்றவற்றை குறித்து கவனமுள்ளவர் களாக இரு க்க வேண்டும். எடுத்துக்காட்டாக, சபையிலே சுவிசேஷ ஊழி யமானது விருத்தியடைந்து கொண்டு செல்கின்றது. ஆனால், அதில் ஈடு படுகின்றவர்களுடைய வாழ்க்கையிலே கீழ்படிவு இல்லா திருக்குமா யின், முதலாவதாக, அவர்கள் தங்கள் கீழ்படியாமையைக் குறித்து எச்சரிக்கையுள்ளவர்களாக இருந்து தங்கள் வாழ்வை மாற்றிக் கொள்ள வேண்டும். கர்த்தருடைய சத்தத்திற்குக் கீழ்ப்படிகிறதைப்பார் க்கிலும், சர்வாங்க தகனங்களும் பலிகளும் கர்த்தருக்குப் பிரியமா யிருக்குமோ? பலியைப்பார்க்கிலும் கீழ்ப்படிதலும், ஆட்டுக்கடாக்களின் நிணத்தைப் பார்க்கிலும் செவிகொடுத்தலும் உத்தமம். ஒருவன் அநேகமாயிரம் ஆத் துமாக்களை ஆதாயப்படுத்தி, தன்னுடைய ஆத்து மாவை கெடுத்துக் கொண்டால் அவன் பிரயாசத்தினாலே அவனுக்கு பலன் என்ன? எனவே, உங்கள் இருதயம் உணர்வற்றுப்போகாதபடிக்கு எச்சரிக்கையு ள்ளவர்களாக இருங்கள்.

**1 தெச 5:19**

ஆவியை அவித்துப்போடாதிருங்கள்.

**ஜெபம்**: அன்பின் பிதாவே, உம்முடைய வார்த்தைக்கு விரோதமான மாம்சத்தின் கிரியைகளை பாராமுகமாக விட்டுவிடாமல், உம் வார்த்தையின்படி என் இருதயத்தை எல்லாக் காவலோடும் காத்துக் கொள்ள எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# வளர்ச்சியின் சுட்டிகள்

இன்றைய உலகிலே சபைகளின் வளர்ச்சியை மனிதர்கள் எப்படியாக அளவிடுகின்றார்கள். பொதுவாக, சபைக்கு செல்வோரின் எண்ணிக்கை, பொருளாதார வளர்ச்சி, கட்டிடங்கள் மற்றும் சபை உபரகரணங்கள், வெளிநாட்டு ஊழியங்களும் செயற்பாடுகளும் அத்தோடுகூட ஆவிக்குரிய வளர்ச்சி என்பதையும் சேர்த்துக் கொள்கின்றார்கள். இவை யாவும் ஒரு ஸ்தாபனத்தின் வளர்ச்சியின் சுட்டிகளாக காணப்படுகின்றது. சில இடங்களிலே, பரிசுத்த வேதாகமத்தின்படி, பாவங்களை வகையறுத்து கூறுதல், மனந்திருப்புதல், பாவமன்னிப்பு, கிறிஸ்து வழியாய் மட்டும் உண்டாகும் இரட்சிப்பு, பரிசுத்த வாழ்வு, கிறிஸ்துவின் வருகை, நியாத்தீர்ப்பு, போன்ற சபையின் அடித்தளமான உபதேசங்களை குறித்து பேசுவதை நிறுத்திக் கொள்கின்றார்கள். ஏனெனில் இந்த உலகத்தின் அளவுகோலின்படி சபையானது வளர்ந்து தன்நிறைவான நிலையை அடைந்திருக்கின்து. பெருந்தொகையான ஜனங்கள் அங்கத்துவம் வகிக்கின்றார்கள். எனவே அந்த நிறைவை காத்துக் கொள்ளும்படி, பாவத்தைக்குறித்தும், நீதியைக்குறித்தும், நியாயத்தீர்ப்பைக் குறித்தும், உலகத்தைக் கண்டித்து உணர்த்தும்படி பிதாவனாவர் அருளிய சத்திய ஆவியானவரின் கிரியைகளை தணித்து விடுகின்றார்கள். அதனால், அவர்கள் நிர்ப்பாக்கியமுள்ளர்களும், பரிதபிக்கப்படத்தக்கவர்களும், தரித்திரர்களும், குருடர்களும், நிர்வாணியுமாயிருக்கிறதை அறியாமல், தாங்கள் ஐசுவரியவான்களென்றும், திரவியசம்பன்னர்களென்றும், தங்களுக்கு ஒரு குறைவுமில்லையென்றும் சொல்லிக் கொள்கின்றார்கள். சத்திய ஆவியானவர் இல்லாத உள்ளத்திலும், இல்லத்திலும், சபையிலும், மனிதர்கள் தங்கள் உண்மை நிலைமையை உணராதபடிக்கு உணர்வற்றுப் போய்விடுகின்றார்கள். பிரியமானவர்களே, நாம் அனைவரும் தேவனுடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்திலும் அறிவிலும் ஒருமைப்பட்டவர்களாகி, கிறிஸ்துவினுடைய நிறை வான வளர்ச்சியின் அளவுக்குத்தக்க பூரணமான நிலையை அடையும்படி, நாளுக்கு நாள் நம்முடைய உள்ளான மனுஷனானது புதிதாக்கப்பட வேண்டும். அடைந்தாயிற்று என்ற எண்ணத்தை விட்டு விட்டு, பரம பந்தையப் பொருளின் இலக்கை அடையும்வரைக்கும், நமக்கு நியமிக்கப்பட்ட ஓட்டத்திலே பொறுமையோடு ஓடக்கடவோம். உலகஸ்தாபனங்களுக்குரிய வளர்ச்சியில், நிர்விசாரம் அடைந்து போகாதபடிக்கு, பரிசுத்தத்தை தேவ பயத்தோடு காத்துக் கொள்வோமாக.

**எபேசியர் 4:11**

**கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத்தக்க பூரண புருஷராகும் வரைக்கும்**,

**ஜெபம்:** உம்முடைய திருக்குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் சாயலில் வளரந்து பெருகும்படி என்னை அழைத்த தேவனே, நான் இந்த உலகத்திற்கு ஒத்த வேஷம் தரியாமலிருக்க என்னை உணர்வுள்ளவனாக்கு வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# பெற்ற நன்மையை காத்துக் கொள்வோமாக

ஒரு சபையிலே இருந்த சிலர், "பாருங்கள் அவர்கள் எத்தனையோ நன்மையான பெரும் செயற்திட்டங்களை செய்து வருகின்றார்கள் அதனால் நாங்களும் அப்படி ஏதாவது செய்ய வேண்டும்" என்றும், இன்னுமொரு சாரார், "பாருங்கள் இன்னார், சபைக்கு தவறாமல் வந்தாலும் எப்படி உல்லாசமாக வாழ்ந்து வருகின்றார்கள். எனவே, நாங்களும் அப்படி வாழ்ந்துவிட்டு போனால் என்ன?" என்றும் கூறிக் கொண்டார்கள். மற்றவர்களுடைய வாழ்க்கை முறைமைகளே இந்த இரண்டு சாராருடைய வாழ்வின் தரத்தை மதிப்பிடும் அளவுகோலாக காணப்பட்டது. மற்றவர்களுடைய நன்மையும், தேவனுக்கு பிரியமுமான வழியை நாம் பின்பற்றுவது நல்லது. ஆனால், மற்றவர்கள் நன்மை செய்வதினால், என் பெயரும் அந்தப் பட்டியலில் வரவேண்டும் என்ற எண்ணத்துடன் காரியங்களை செய்யாமல், மனதார நன்மைகளை செய்ய வேண்டும். அதுமட்டுமல்லாமல், நம்முடைய பெலனுக்கு மிஞ்சின காரியங்களை தேவன்தாமே நம்மிடமிருந்து எதிர்பார்ப்பதில்லை. நமக்கு கொடுக்கப்பட்ட பெலனுக்கு தக்கதாக இருக்க வேண்டும். "உங்களில் எவனானாலும் தன்னைக்குறித்து எண்ணவேண்டியதற்கு மிஞ்சி எண்ணாமல், அவனவனுக்கு தேவன் பகிர்ந்த விசுவாச அளவின்படியே, தெளிந்த எண்ணமுள்ளவனாய் எண்ணவேண்டும். ஏனெனில், நமக்கு ஒரே சரீரத்திலே அநேக அவயவங்களிருந்தும், எல்லா அவயவங்களுக்கும் ஒரே தொழில் இல்லை. பிலதெல்பியா சபையின் தூதனுக்கு நீ எழுதவேண்டியது என்னவெனில்: பரிசுத்தமுள்ளவரும், சத்தியமுள்ளவரும், தாவீதின் திறவுகோலை உடையவரும், ஒருவரும் பூட்டக்கூடாதபடிக்குத் திறக்கிறரும், ஒருவரும் திறக்கக்கூடாதபடிக்குப் பூட்டுகிறவருமாயிருக்கிறவர் சொல்லுகிறதாவது. உன் கிரியைகளை அறிந்திருக்கிறேன் உனக்குக் கொஞ்சம் பெலன் இருந்தும், நீ என் நாமத்தை மறுதலியாமல், என் வசனத்தைக் கைக்கொண்டபடியினாலே, இதோ, திறந்தவாசலை உனக்கு முன்பாக வைத்திருக்கிறேன், அதை ஒருவனும் பூட்டமாட்டான் என்று நம்முடைய ஆண்டவராகிய இயேசு கூறியிருக்கின்றார். எனவே, நாம் எந்த சூழ்நிலையிலும், இயேசுவின் நாமத்தை மறுதலியாமலும், நாம் அறிந்திருக்கின்ற தேவனுடைய வார்த்தையின் வழியிலே நம்முடைய வாழ்க்கையை நடத்துகின்றவர்களாகவும் நாம் காணப்படுவோமாக.

**வெளி 3:11**

**இதோ, சீக்கிரமாய் வருகிறேன்; ஒருவனும் உன் கிரீடத்தை எடுத்துக்கொள்ளாதபடிக்கு உனக்குள்ளதைப் பற்றிக்கொண்டிரு.**

**ஜெபம்**: என்னை பெலப்படுத்துகின்ற தேவனாகிய கர்த்தாவே, நான் உம்மிடத்தில் பெற்றுக் கொண்ட நன்மையை முழு இருதயத்தோடும் காத்துக் கொள்ளும்படிக்கு என்னை நீர் வழிடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# அழைப்பின் மேன்மையான நோக்கம்

**2 பேதுரு 1:10**

**உங்கள் அழைப்பையும் தெரிந்துகொள்ளுதலையும் உறுதியாக்கும்படி ஜாக்கிரதையாயிருங்கள்**;

ஒரு சிறிய கிராமமொன்றிலே இயங்கி வந்த சனசமூக நிலையத்தினால், அந்த கிராமத்தில் வாழ்ந்து வந்த மக்களுக்கு அநேக நன்மைகள் உண்டாயிருந்தது. அந்த வழியாய் செல்லும் மனிதர்கள், கடும் வெயில் நாட்களில், சற்று உட்கார்ந்து, தாகத்திற்கு தண்ணீர் அருந்தி, இளைப்பாறி செல்வதற்கும், மழை நாட்களிலே ஒதுங்குவதற்கும், இரவு நேரங்களிலே, கிராமத்தி லுள்ள மாணவர்கள் சென்று படிப்பதற்கும் வசதியாக அந்த சனசமூக நிலையத்தின் கட்டிடமானது அமைக்கப்பட்டிருந்தது. ஒரு நாள் அந்த சனசமூக நிலையத்தின் நிர்வாகத்திலிருந்து, சில அலுவல்களை கவனிப்பதற்காக, பட்டணம் சென்றிருந்த சிலர், அந்த பட்டணத்திலிருந்த சனசமூக நிலையத்தின் கட்டிட அமைப்பையும், தொழிநுட்ப வளர்ச்சியையும் கண்டு ஆச்சியப்பட்டார்கள். தங்கள் கிராமத்தின் நிலைமையையும், மக்களின் தேவைகளையும் சிந்தித்துப் பார்க்காமல், தாங்களும், குறைந்த பட்ச்சம் சில கம்யூட்டர்களை வாங்க வேண்டும் என்ற ஆசை அவர்கள் உள்ளத்தில் எழுந்தது. அதன்படி சில கம்யூட்டர்களை வாங்கிக் கொண்டார்கள். அவைகளை பாதுகாப்பதற்காக, நிலையத்தின் திறந்த மண்டபத்திற்கு கதவுகளையும், ஜன்னல்களையும் போட்டார்கள். கம்யூட்டர்களின் பாதுகாப்பு கருதி, நிலையமானது அதிக நேரம் திறந்து வைக்க முடியாது என்ற தீர்மானத்தை எடுத்துக் கொண்டார்கள். தற்போது, அவ்வழியிலே செல்லும் மக்கள் இளைப்பாற இடம் இல்லை. இரவு நேரங்களிலே மாணவர்கள் சென்று தங்கள் பாடங்களை படிக்க முடியவில்லை. ஆனால், தொழில்நுட்ப கருவிகளானது, பொருத்தப்பட்டு, உள்ளே பாதுகாப்பாக இருந்து வந்தது. அதனால், சில நிர்வாகிகள் திருப்தியானார்கள் ஆனால் சனசமூக நிலையமானது ஆரம்பித்த நோக்கமானது மாற்றப்பட்டு, மக்கள் அன்றாட தேவைகளை நிறை வேற்ற முடியாமற்போயிற்று. பிரியமானவர்களே, என் தனிப்பட்ட வாழ்வின், குடும்பத்தின், சபையின் பிரதானமான நோக்கம் என்ன? என்ற கேள்வியை ஒவ்வொரும் ஆராய்ந்து அறிய வேண்டும். சில மனிதர்கள் மனதின் ஆசைகளை தங்கள் இருதயத்தின் வாஞ்சை என்று கூறிக் கொள்வார்கள். அந்த வாஞ்சையானது எதுவாக இருந்தாலும், அவை யாவும், நம்மைக் குறித்ததான தேவனுடைய திட்டத்திற்குள் அடங்கியிருக்க வேண்டும். இல்லாவிடில், அவை எவ்வளவு சிறப்பாக இருந்தாலும், அதனால் உண் டாகும் பிரயோஜனம் அற்பமானவைகளே.

**ஜெபம்**: பரம அழைப்பின் பந்தையப் பொருளுக்காக என்னை அழைத்த தேவனே, உம்முடைய மேன்மையான அழைப்பின் நோக்கத்தை ஒரு போதும் மறந்துவிடாதபடிக்கு உணர்வுள்ள இருதயத்தை தந்து வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# அழியாமை நம்மை ஆண்டு கொள்ளட்டும்

ஒருவன் உங்களுக்கு ஒரு கன்னத்தில் அறையும் போது நோவு ஏற்படுகின்றது. தங்கள் சரீரங்களை மிகவும் சிறப்பாக கவனித்து, பராமரித்து வருகின்றவர்களுக்கும் சரீரத்திலே வியாதிகளும், பெலவீனங்களும் உண்டாகின்றது. இந்த நோவுகள், வியாதிகள், பெலவீனங்கள் அழிவுக்குரிய சரீரங்களிலேயே ஏற்படுகின்றது. இறுதியிலே மரணமானது சரீத்தை ஆட்கொள்கின்றது. நாம் அழியாமையை தரித்துக் கொள்ளும் போது, அங்கே மரணமும், துக்கமும், அலறுதலும், வருத்தமும் ஏற்படுவதில்லை. (வெளி 21:4). வானத்துக்குரிய மேனிகளுமுண்டு, பூமிக்குரிய மேனிகளுமுண்டு வானத்துக்குரிய மேனிகளுடைய மகிமையும் வேறே, பூமிக்குரிய மேனிகளுடைய மகிமையும் வேறே. நாம் விண்ணவருக்குரிய அழியாமையை தரித்துக் கொள்ளும்வரை, நாம் பூமியலே வாழ்ந்தாலும், இந்த உலகத்திற்குரிய போக்கிலே வாழத்தேவையில்லை. விண்ணுலகின் மகிமையை துறந்து, மண்ணுலகிற்கு வந்த நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசுதாமே, நமக்காக தம் சரீரத்திலே பாடுகளை பட்டார். அந்த வேளையிலே, அவர் சரீரத்தில் ஏற்பட்ட நோவுகள், அவமானங்கள் நிந்தைகள் எதுவுமே அவரை ஆண்டு கொள்ளவில்லை. அதுபோலவே, நாமும் அவருடைய சாயலிலே நாளுக்கு நாள் வளர்ந்து பெருக வேண்டும். “நாங்களோ உலகத்தின் ஆவியைப்பெறாமல், தேவனால் எங்களுக்கு அருளப்பட்டவைகளை அறியும்படிக்கு தேவனிலிருந்து புறப்படுகிற ஆவியையே பெற்றோம்.” (1 கொரி 2:12). அந்த ஆவிக்கேற்றபிரகாரமாய் நாம் வாழும் போது, அழிவுக்குரிய சரீரத்தின் ஏற்படும் நோவுகள், சிந்தைகள், அவமானங்கள் ஒன்றும் நம்மை ஆண்டு கொள்ளப் போவதில்லை. எப்படியெனில், நன்மையேயன்றி, தீமை ஏதுவும் செய்யாத நம்முடைய ஆண்டவராகிய இயேசுதாமே, சிலுவையிலே மரிக்கும் தறுவாயிலும், பிதாவே, இவர்கள் அறியாமல் செய்கின்றார்கள், இவர்களை மன்னியும் என்று தன்னைத் துன்பப்படுத்துகின்றவர்களுக்காக வேண்டிக் கொண்டார். அவரிடம் இருந்த அழியாமைக்குரிய சத்திய ஆவியானவர் நம்மோடும் இருக்கின்றார். எனவே சாவுக்கேதுவானவைகள் நம்மை ஆண்டுகொள்ளாதபடிக்கு துன்பங்கள் மத்தியிலும் அழியாமை நம்மை ஆண்டுகொள்ள இடம் கொடுப்போமாக.

**I கொரிந்தியர் 15:48**

மண்ணானவன் எப்படிப்பட்டவனோ மண்ணானவர்களும் அப்படிப்பட்டவர்களே; வானத்துக்குரியவர் எப்படிப்பட்டவரோ, வானத்துக்குரியவர்களும் அப்படிப்பட்டவர்களே.

**ஜெபம்**: உம்முடைய குமாரனாகிய இயேசுவின் சாயலடைய என்னை அழைத்த தேவனே, கிறிஸ்துவின் சிந்தை என்னை எப்போதும் ஆண்டு கொள்ளும்படிக்கு உணர்வுள்ள இருதயத்தை தந்து என்னை வழிந்த்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# நோவுகள் மேற்கொள்ளும் இடங்கள்

ஆண்டவராகிய இயேசுவின் ஊழியக்காரனாகிய ஸ்தேவானானவன், சத்தியத்தை தூய்மையாக பேசுகின்ற மனிதனாக இருந்து வந்தான். அவன் பேசின ஞானத்தையும் ஆவியையும் எதிர்த்துநிற்க ஒருவராலும் கூடமாற்போயிற்று. அந்த வேளையிலே அவனை குற்றப்படுத்தும்படி, அந்நாளிலிருந்த மதத் தலைவர்கள், பொய்சாட்சிகளை நிறுத்தினார்கள். ஆலோசனைச் சங்கத்தில் உட்கார்ந்திருந்த அனைவரும் அவன்மேல் கண்ணோக்கமாயிருந்து, அவன் முகம் தேவதூதன் முகம்போலிருக்கக் கண்டார்கள். தேவகாரியங்களை உணரகூடாதபடிக்கு அவர்களுக்கிருந்த மனக்கடினத்தை அவன் அவன் கண்டித்து உணர்த்தினான். ஆலோசனைச் சங்கத்தார் அவன்மேல் எரிச்சலடைந்ததினால் அவனை கைது செய்தார்கள். அவனை கொன்று போடும் படிக்கு பொய்சாட்சிகளை தேடினார்கள். தேவ வார்த்தைகளை கேட்டபோது அவர்கள் அவன்மேல் மூர்கமடைந்தார்கள். பலர் முன்னிலையிலே, அவனுக்கு கல்லெறிந்தார்கள். இத்தகைய அநியாயங்களை அவர்கள் ஸ்தேவானுக்கு செய்திருந்தும், அவன் மனதிலோ, அந்த சங்கத்திலே இருந்தவர்களை குறித்த கசப்பு ஒட்டிக் கொள்ளவில்லை. மாறாக, அவர்கள் வாக்களிக்கப்பட்ட மெசியா இயேசு என்பதை உணராமல், அழிந்து போகக்கூடாது என்ற எண்ண முள்ளவனாகவே இருந்தான். அவர்கள் அவன்மேல் கல்லெறியும் போது, அவனோ முழங்காற்படியிட்டு: ஆண்டவரே, இவர்கள் மேல் இந்தப் பாவத்தைச் சுமத்தாதிரும் என்று மிகுந்த சத்தமிட்டுச் சொன்னான். இப்படிச் சொல்லி, கர்த்தருக்குள் நித்திரையடைந்தான். இன்று உங்களை குறித்தோ, உங்கள் குடும்பங்களைக் குறித்தோ, நியாயமாகவோ அநியாயமாகவோ மனிதர்கள் குறைகூறும் போது, உங்கள் மனதிலே எழும்புகின்ற உணர்வுகள் என்ன? சபையிலே நன்மைக்கு சக விசுவாசிகள் தீமை செய்யும் போது, உங்கள் மனதிலே கசப்பு ஒட்டிக் கொள்கின்றதா? அப்படியானால், சாவுக்கேதுவான புறம்பான பழைய மனுஷனுக்குரிய மாம்ச சுபாவங்களே உங்களை ஆண்டு கொள்கின்றது. எங்கே மாம்சத்தின் ஆளுகை உண்டோ, அங்கே மாம்சத்திற்குரியவைகள் குடிகொள்ளும். ஆவிக்குரிய இருதயத்திலே வன்மம், மனக்கசப்பு, பிரிவினை வலுவிழந்ததாகவும், செயலற்றதாகவும் இருக்கும். உங்கள் வாழ்விலே கசப்புக்களும் நோவுகளும் குடிகொண்டிருந்தால், உங்கள் இருதயத்தைதேவவார்த்தையின் வெளிச்சத்திலே ஆராய்ந்து பாருங்கள்.

**2 கொரிந்தியர் 4:16**

**எங்கள் புறம்பான மனுஷனானது அழிந்தும், உள்ளான மனுஷனானது நாளுக்கு நாள் புதிதாக்கப்படுகிறது.**

**ஜெபம்**: அன்பின் பரலோக தேவனே, அதிசீக்கிரத்தில் நீங்கும் இலேசான நம்முடைய உபத்திரவம் மிகவும் அதிகமான நித்திய கனமகிமையை உண்டாக்குகிறது என்பதை உணர்ந்து கொள்ளும்; இருதயத்தை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# நீதிக்குள் கொஞ்ச அநீதி இருந்தால் என்ன?

ஒரு ஊரிலே வாழ்ந்து வந்த நண்பர்களில் சிலர், கடற்கரைக்கு அருகே ஒன்றுகூடி கூழ் சமைத்தார்கள். அவர்கள் அதை சமைத்து முடித்து, ருசிபார்ப்பதற்கு முன்னதாக, அந்த கூழ்ப் பானைக்குள்ளே ஒரு சிறிய விஷப்பூச்சி விழுந்து விட்டது. அதனால் அந்த கூழ் சாப்பிடுவதற்கு உதவாமற் போய்விட்டது. பார்ப்பதற்கு அது கூழ் போல இருந்தாலும், பார்ப்பவர்கள் அதை கூழ் என்று கூறினாலும், உண்மையிலே அதை விஷம் என்றே கூறமுடியும். அவ்வண்ணமாகவே, நீதிக்குள் கொஞ்ச அநீதி இருக்குமாயின் அதை நீதி என்று கூற முடியாது. சுத்தமான தண்ணீர் இருக்கும் ஒரு கிண்ணத்திலே, ஒரு துளி விஷத்தை சேர்த்துக் கொண்டால் அது முழுவதும் விஷமாகிவிடுமல்லவோ? சத்திய வேதத்தை கொஞ்சம் சமரசம் செய்து பேசினால் என்ன? இப்படியாக பரிசுத்தத்தை சமரசம் செய்து, கொஞ்சம் அசுத்தத்தை சேர்த்துக் கொள்ளுகிறவர்களை ஏற்றுக் கொண்டு அவர்களோடு ஐக்கியமாக இருப்பவர்களை எப்படி அழைக்க முடியும்? கொஞ்சம் பரிசுத்தமுள்ளவர்கள் என்று கூற முடியுமா? நீதிக்கும் அநீதிக்கும் சம்பந்தமேது? ஒளிக்கும் இருளுக்கும் ஐக்கியமேது? கிறிஸ்துவுக்கும் பேலியாளுக்கும் இசைவேது? அவிசுவாசியுடனே விசுவாசிக்குப் பங்கேது? என்று பரிசுத்த வேதாகமம் கூறுகின்றது. தவறுகள், குறைவுகள் விசுவாசிகளுடைய வாழ்கையிலே இடம்பெறுவதுண்டு. அப்படிப்பட்ட வேளைகளிலே, உண்மையுள்ள விசுவாசிகள் தங்கள் தவறுகளை அறிக்கையிட்டு விட்டுவிட வேண்டும். “நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்.” ஆனால், சவுல் ராஜாவைப்போல, தங்கள் குற்றங்களை ஏற்றுக் கொள்ளாமல், அவைகளை நியாப்படுத்தி சமரசம் செய்ய முயலும் போது, நாம் தேவனை பொய்யராக்குறவர்களாயிருப்போம், அவருடைய வார்த்தை நமக்குள் இராது. (1 யோவான் 1:9-10). விலைமதிக்கமுடியாத இரட்சிப்பை பெற்ற பிரியமான சகோதர சகோதரிகளே, கிருபையின் நாட்களில் நாம் வாழ்கின்றோம். தேவனுடைய நீடிய பொறுமையை அசட்டை செய்யாமல், காலம் கடந்துசென்று இருதயமானது கடினப்பட்டு, உணர்வற்று போவதற்கு முன்னதாக யாவரோடும் ஐக்கியமாக இசைந்திருக்கின்றீ ர்கள் என்பதை தேவனுடைய வார்த்தையின் வெளிச்சத்தில் ஆராய்ந்து பாருங்கள்.

**கலாத்தியர் 5:9**

புளிப்புள்ள கொஞ்சமாவானது பிசைந்த மாவனைத்தையும் உப்பப்பண்ணும்.

**ஜெபம்**: குறைகளை நிறைவாக்கும் தேவனே, நான் விட்டுவந்த உலகத்தின் உறவுக்குள் மறுபடியும் இழுப்புண்டு போகாதபடிக்கு பிரகாசமுள்ள மனக் கண்களை தந்து உம்முடைய சத்திய வழியிலே நடக்க உதவி செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# மெய்யான ஒளி பிரகாசிக்கட்டும்

ஒரு விசுவாசியானவனின் குடும்பத்திலே ஜெபமும் வேதவாசிப்பும், தியானம் ஒழுங்காக நடைபெற்றுக் கொண்டிருந்தது. விசேஷ தினங்களிலே அவர்கள் கூடிவரும் போது, அவர்கள் ஆர்வத்தோடு, முதலாவதாக, ஆண்டவராகிய இயேசுவுக்கு நன்றி செலுத்துவது வழக்கமாக இருந்தது. இதனால், அவர்களின் சில உறவினர்கள், அவர்களுடைய விசேஷித்த நாட்களிலும், கொண்டாட்டங்களிலும் கலந்து கொள்ளாமல் இருந்து வந்தார்கள். ஆண்டுகள் கடந்து சென்றபின், கர்த்தரை அறியாத உறவினர்கள், அந்த விசுவாச குடும்பத்தோடு, ஒரு ஒப்பந்தத்தை ஏற்படுத்திக் கொண்டார்கள். உங்கள் சபையோர் ஒன்றுகூடி வரும்போது நீங்கள் ஜெபித்துக் கொள் ளுங்கள், ஆனால் நாங்கள் உறவினராக கூடும் போது, ஜெபத்தை செய்யாதிருங்கள். அப்படியானால், நாங்கள் யாவரும் ஒன்றாக சந்தோஷமாக நேரத்தை கழிக்கலாம் என்று கூறினார்கள். உறவுகளை ஆதாயப் படுத்த வேண்டும் என்று அந்த விசுவாசக் குடும்பத்தினரும், விசேஷித்த நாட்களிலே, உறவுகள் முன்னிலையில் ஜெபம் செய்வதை விட்டுவிட்டார்கள். இது தங்கள் பரந்த தாராளமான மனம் என்று நினைத்துக் கொண்டார்கள். எல்லோரையும் ஏற்றுக் கொள்ள வேண்டும். மற்றவர்களின் மனங்களை நாங்கள் துன்பப்படுத்துவது நல்லதல்ல, எனவே கொஞ்சம் அவர்களுக்காக எங்கள் வாழ்க்கையை மாற்றிக் கொள்வோம் என்று சமரசம் செய்து கொண்டார்கள். இது அவர்களுடைய பின்மாற்றமான வாழ்வு என்று உணராதபடிக்கு, அவர்கள் இருதயத்திலே இருள் ஆட்கொள்ள ஆரம்பித்தது. ஆனால், அவர்களோ, நாங்கள் ஆலயத்திற்கு செல்கின்றோம் அதனால் நாங்கள் ஒளியிலே நடக்கின்றோம் என்று எண்ணிக் கொண்டார்கள். ஆனால், அவர்கள் தங்கள் இருதயத்திலே, மெய்யான ஒளியானது பிரகாசிக்காதபடிக்கு, திரையை போட்டுக் கொண்டதை உணராமல் வாழ்ந்து வந்தார்கள். தேவன் ஒளியாயிருக்கிறார், அவரில் எவ்வளவேனும் இருளில்லை. இது நாங்கள் அவரிடத்தில் கேட்டு, உங்களுக்கு அறிவிக்கிற விசேஷமாயிருக்கிறது. நாம் அவரோடே ஐக்கியப்பட்டவர்களென்று சொல்லியும், இருளிலே நடக்கிறவர்களாயிருந்ததால், சத்தியத்தின்படி நடவாமல் பொய்சொல்லுகிறவர்களாயிருப்போம். மெய்யானஒளியாகிய இயேசுநம்மோடு இருந்தால், அங்கே இருளுக்கு இடமேயில்லை. அந்த மெய்யான ஒளியானது, நம் மில் எப்போதும்பிரகாசிக்கும்படி உணர்வுள்ள வாழ்க்கையை வாழ்வோமாக.

## யோவான் 1:5

**அந்த ஒளி இருளிலே பிரகாசிக்கிறது; இருளானது அதைப் பற்றிக்கொள்ளவில்லை.**

**ஜெபம்:** அந்தகார இருளிலிருந்து ஆச்சரியமான ஒளிக்கு என்னை அழைத்த தேவனே, நான் பெற்றுக் கொண்ட மெய்யான ஒளியானது எப்போதும் சுடர்விடும்படி உணர்வுள்ள ஜீவியத்தை ஜீவிக்க எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# அந்த ஒரு நாள்!

திருமண ஆராதனை எளிமையாகவும் இனிமையாவும் இருக்க வேண் டும். எவ்வளவு குறுகியதாகக்கூடுமோ அவ்வளவு குறுகியதாக்கும்படி யாக ஒரு திருமண தம்பதிகள் முயற்சி செய்தார்கள். சீக்கிரமாக ஆலய வளாகத்தைவிட்டு போனவுடன், எவ்வளவு அதிக நேரம் கொண்டாட்ட மண்டபத்தில் இருக்க அனுமதி உண்டோ, அவ்வளவு நேரமும் அங்கே இருந்து, உண்டு, குடித்து, சம்பா ஷித்து, ஆடிப்பாடி, நேரத்தை களித் தார்கள். திருமண நாள் ஒரு நாள், அந்த நாளிலே, குடும்ப வாழ்க் கையை ஆசீர்வதிக்கும் ஆண்ட வராகிய இயேசு கிறிஸ்துவை கன ப்படுத்த வேண்டும் என்னும் மேன் மையான நோக்கத்தை அசட்டை செய்து, திருமண விழா ஒருநாள், எனவே தங்கள் மனதும், மாம்சமும், நண்பர்களும் விரும்பும் காரியங்கள் யாவையும், துணிகரமாக நடப்பிக்க ஆவலுள்ளவர்களாக இருக்கின்றார்கள். ஆலயத்திலே ஆசியைப் பெற்று, ஆலய வளாகத்திற்குள் ஆண்டவர் இயேசுவை விட்டுவிட்டு, உலகத்தின் போக்கிற்கு தங்களை மனதார ஒப்புக் கொடுகின்றார்கள். இவ்விதமாக ஒரு விசுவாசியின் வாழ்க்கையானது அந்த விசுவாசியின் திருமண நாளை பிரதிபலிக்கின்றது போல, ஒரு விசுவாசியின் திருமண நாளும் அந்த விசுவாசியின் வாழ்க்கையை பிரதிபலிக்கின்றது. இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகும்படி அழைக்கப்பட்ட சகோதர சகோதரிகளே, கர்த்தரு டைய நாளும் குறித்த ஒரு நாளில் வரும். தன் பாடங்களை ஊக்கமாக படித்து, குறித்த நாளிலே வர இருக்கும் பரீட்சைக்கு ஆயத்தப்படும் ஒரு நல்ல மாணவனைப் போல, நாமும், அந்த ஒரு நாளுக்காக ஆயத் தமுள்ளவர்களாக காணப்பட வேண்டும். சில தேவ பிள்ளைகள், தாங் கள் காத்துக் கொண்ட பரிசுத்த வாழ்க்கையை ஒரு நாள் மாம்ச இன்ப த்திற்காக ஒரே நாளிலே கெடுத்துக் கொள்கின்றார்கள். நினையாத நாளிலே கர்த்தருடைய நாள் வரும் எனவே அந்த நாள் திருடனை ப்போல உங்களைப் பிடித்துக்கொள்ளாதபடிக்கு, நீங்கள் விழிப்புள்ள வர்களாக காணப்படவேண்டும் என்று பரிசுத்த வேதாகமத்திலே வாசிக் கின்றோம். கர்த்தருடைய நாள் சீக்கிரமாய் வரும். எனவே, நோவாவின் நாட்களில் இருந்த ஜனங்களைப் போல, உணர்வற்றவர்களாக வாழாமல், கர்த்தருடைய வார்த்தையில் நிலைத்திருப்போமாக.

**மத்தேயு 25:13**

மனுஷகுமாரன் வரும் நாளையாவது நாழிகையை யாவது நீங்கள் அறியாதிரு க்கிறபடியால் விழித்திருங் கள்.

**ஜெபம்:** பரலோக பிதாவே, இந்த உலகத்திற்கு ஒத்த வேஷந்தரித்து, மனக்கண்கள் குருடுபட்டு போய்விடாதபடிக்கு, வெளிச்சத்தின் பிள்ளை யாவும், பகலிலே நடக்கின்றவனாகவும் இருக்க கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# அலட்சியமான வாழ்க்கை வேண்டாம்

ஈசாக்கு என்னும் மனிதனுக்கு ஏசா, யாக்கோபு என்னும் பெயர்களையுடைய இரண்டு குமாரர்கள் இருந்தார்கள். தேவ ஒழுங்கின்படி, சேஷ்டபுத்திர சுதந்தரம் மூத்தவனுக்குரியது. ஒருநாள் ஏசா வெளியி லிருந்து களைத்து வந்தபோது, இளையவனாகிய யாக்கோபு கூழ் சமைத்துக் கொண்டிருந்தான். அப்பொழுது ஏசா யாக்கோபை நோக்கி: அந்தச் சிவப்பான கூழிலே நான் சாப்பிடக் கொஞ்சம் தா, இளைத்திருக்கிறேன் என்றான். அப்பொழுது யாக்கோபு: உன் சேஷ்ட புத்திர பாகத்தை இன்று எனக்கு விற்றுப்போடு என்றான். அதற்கு ஏசா: இதோ,நான் சாகப் போகிறேனே, இந்தச் சேஷ்ட புத்திர பாகம் எனக்கு என்னத்திற்கு என் றான். அப்பொழுது யாக்கோபு: இன்று எனக்கு ஆணையிட்டுக்கொடு என்றான் அவன் யாக்கோபுக்கு ஆணையிட்டு, தன் சேஷ்ட புத்திரபாகத்தை அவனுக்கு விற்றுப்போட்டான். அப்பொழுது யாக்கோபு ஏசாவுக்கு அப்பத்தையும் பயற்றங்கூழையும் கொடுத்தான் அவன் புசித்துக் குடித்து எழுந்திருந்து போய்விட்டான். இப்படியாக மூத்தவாகிய ஏசா, தன் வயிற்றுக்காக, ஒரே நாளிலே, தன் சேஷ்ட புத்திரபாகத்தை அலட்சியம் பண்ணி இழந்து போனான். இன்று சில விசுவாசிகளும் கூட, கல்வி, வேலை, திருமணம், குடும்ப கௌரவம், உறவுகள், நண்பர்கள், ஆஸ்திகள், உல்லாசப் பயணங்கள் போன்ற வற்றிகாக, தேவன் நியமித்த ஒழுங்குகளை அலட்சியம் பண்ணிக் கொள்கின்றார்கள்? கல்வி அவசியமல்லவா? சாப்பிடவதற்கு வேலை தேவவையல்லா? பிள்ளைகள் விரும்புகின்றவர்களை திருமணம் செய்தால் என்ன? உறவுகள் நண்பர்கள் அவசியமல்லவா? ஒருவேளை இந்த கேள்விகளுக்குரிய பதில் அவரவர் மனநிலையின்படி ஆம் என்று இருக்கலாம். ஆனால், இவற்றில் எதுவும் நித்திய ஜீவனுக்கு இணையாகுமா? இவைகளால் ஒருவன் தன் ஆத்துமாவை கெடுத்துக் கொண்டால்,அவன் முடிவு என்னவாகும்? பிரியமானவர்களே, இன்றைய நாளிலே அழைப்பின் மேன்மையை சற்று ஆழமாக தியானம் செய்யுங்கள். உங்களுடைய நீதியை இந்த உலகத்திலே ஏறத்தாழ யாவரும் அங்கீகரித்தாலும், அந்த நீதியினால் நித்திய ஜீவனை உண்டாகாது. எனவே, தேவ நீதி உங்கள் வாழ்வில் நிறைவேற இடங்கொடுங்கள். பிற்பாடு ஏசா ஆசீர்வாதத்தைச் சுதந்தரித்துக்கொள்ள விரும்பி, அவன் கண்ணீர்விட்டு, கவலையோடே தேடியும் மனம் மாறுதலைக் காணாமற்போனான்.

**எபிரெயர் 12:16**

**ஒருவேளைப் போஜனத்துக்காகத் தன் சேஷ்டபுத்திர பாகத்தை விற்றுப்போட்ட ஏசாவைப்போலச் சீர்கெட்டவனாகவும் இராதபடிக்கும் எச்சரிக்கையாயிருங்கள்.**

**ஜெபம்**: கிருபையின் நாட்களை ஈவாக கொடுத்திருக்கும் தேவனே, இந்த அருமான நாட்களிலே, அழிந்து போகும் இந்த உலக வாழ்க்கைக்காக மேன்மையானவைகளை இழந்து போகாதபடிக்கு என்னைக் காத்துக் கொள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

செவ்வாய் | தை 23

📖 மாலை வாசகம் – சங்கீதம் 19:12 –14

# பேச்சும் கிரியையும்

ஒரு பெற்றோரின் ஐம்பதாவது ஆண்டு திருமண நாள் நிறைவை கொண்டாடும் முகமாக, அவர்களுடைய பிள்ளைகள், பெருந் தொகை யான பணத்தை செலவு செய்து, உலகத்தின் நாலு திசைகளிலுமிருந்து குறித்த நாளிலே ஒன்று கூடினார்கள். விழாவின் நாளிலே, பிள்ளைகள் ஒவ்வொருவரும் உற்றார், உறவினர், நண்பர்கள் முன்னிலையிலே தங்கள்பெற்றோரைக் குறித்து உரை யாற்றினார்கள். பெற்றோரை குறி த்த மேன்மையான காரியங்களை பேசி, அவர்களின் அர்பணிப்பையும், அன்பையும் பெருமையாக கூறினா ர்கள். அவர்கள் பேச்சிலே குறை யோ, தவறேதும் இருக்கவில்லை, ஆனால், பிள்ளைகளின் வாழ்க்கை முறைமையோ, பெற்றோரின் அர்பணிப்புக்கும், அன்புக்கும் ஏற்புடையதாக இருந்ததில்லை. அந்த நிலையை பெற்றோர் மற்றும் நெருக்கிய உறவுகளும் நன்கு அறிந்திரு ந்தார்கள். இவ்வண்ணமாகவே, “இந்த ஜனங்கள் தங்கள் வாயினால் என்னிடத்தில் சேர்ந்து, தங்கள் உதடுகளினால் என்னைக் கனம்பண்ணு கிறார்கள் அவர்கள் இருதயமோ எனக்குத் தூரமாய் விலகியிருக்கிறது” (ஏசாயா *29:13*). என்று தான் தெரிந்து கொண்ட ஜனங்களின் வாழ்க் கையைக் குறித்து தேவனாகிய கர்த்தர்தாமே, தம்முயை தாசனாகிய ஏசாயா வழியாக சுட்டிக் காட்டினார். பேசும் வார்த்தைகள் உண்மையுள் ளவைகள் ஆனால் செய்யும் கிரியைகளோ பேசும் வார்த்தைகளுக்கு முரணாக இருக்கின்றது. அறிக்கையிலே ஆண்டவர் இயேசுவே இரட் சகர் ஆனால் கிரியைகளினாலே அவரை மறுதலிக்கின்றார்கள். எழுத் திலே நாங்கள் கிறிஸ்தவர்கள் ஆனால் வாழ்க்கையிலோ கிறிஸ்து இல்லை. பிரியமானவர்களே, இவைகளை குறித்து நாம் மிகவும் கருத் துள்ளவர்களாக இருக்க வேண்டும். இந்த நாட்களிலே, யாரும் உங்க ளிடம் வந்து நீ இயேசுவை மறுதலிக்கும்படி பலவந்தம் பண்ணுவ தில்லை. அத்தகைய செய்திகளை கேள்விப்படுவது மிகவும் அரிதாக இருக்கின்றது. ஆனால், மறைமுகமாக உங்கள் கிரியைகள் வழியாக கிறிஸ்துவை மறுதலிக்கும்படியான போக்குகள் இந்த உலகத்திலே ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. இறுதி நாளிலே நாம் கர்த்தர் முன்பாக நிற் கும் போது, நாங்கள் எப்போது உம்மை மறுதலித்தோம் என்ற கேள் விக்கு இடம் இல்லாதிருக்கும்படிக்கு, இந்த நாட்களிலே எச்சரிக்கையு ள்ளவர்களாக இருப்போம். தேவபக்தியின் வேஷத்தைத் தரித்து அதின் பெலனை மறுதலிக்கிறவர்களாக இருக்கும் மனிதர்களைவிட்டு விலகி பயபக்தியோடு தேவனை ஆராதிப்போமாக.

**லூக்கா 21:8**

**நீங்கள் வஞ்சிக்கப்படாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்**;

**ஜெபம்**: பரிசுத்த வாழ்க்கைக்கென்று என்னை வேறு பிரித்த தேவனே, என் வாயின் வார்த்தைகளும், இருதயத்தின் தியானமும், என் கிரியைக ளும் உமக்கு ஏற்புடையதாக இருக்கும்படி என்னை வழிநடத்திச் செல்வீ ராக. இரட்சகர்இயேசுவழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# யார் உங்களை ஏற்றுக் கொள்கின்றார்கள்?

ஒரு குறிப்பிட்ட ஸ்தாபனத்தினால் நடத்தப்பட்டஆண்டு முடிவின் கொண்டாடத்திற்கு அந்த ஸ்தானத்தின் இயக்குனர், அவருடைய சில நண்பர்களை அழைத்திருந்தார். அந்த அழைப்பை ஏற்று, விசுவாசியாக இருந்த இரண்டு பேர் அந்த மாலை நேரக் கொண்டாடத்திற்கு சென்றிருந்தார்கள். விழா ஆரம்பித்ததும், காரியங்கள் யாவும் ஒழுங்காகவும், ஒழுக்கமாகவும் நடைபெற்றுக் கொண்டிருந்தது. ஆனால், குறித்த நேரத்திற்குபின், எதிர்பாராத களியாட்டக் காரியங்கள் அங்கே இடம் பெறஆரம்பித்தது. அங்கு சென்ற இரண்டு நண்பர்களில் ஒருவன், ரோமாபுரியிலிருந்தால் ரோமரைப் போல நடந்து கொள்ள வேண்டும் என்று, அங்குள்ளவர்களோடு தானும் ஒருவனாக இணைந்து, அவர்களைப் போல காணப்பட்டான். ஆனால், இரண்டாவது நண்பனோ, அந்த உலக களியாட்ட நிகழ்வுகளுக்கு பழக்கப் படாதவனாகையாகல், அவர்களோ இணைந்து கொள்வது எப்படி என்றுகூட அறியாதிருந்தான். அங்குள்ள மற்றய விருந்தாளிகள் இவனை ஒரு புறம்போக்கானவனைப் போலபார்த்தார்கள். அந்த மண்டபத்திலேஇருப்பது அவனுக்கு அசௌகரியமாக இருந்ததினால், அவன் எழுந்து தனியாக வீடு திருப்பினான். அந்த இரவிலே ஒருவன் இந்த உலகத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டு, அவர்களுடைய நன்மதிப்பை பெற்றான். அவனுடைய திறந்த மனமுடைய மத நம்பிக்கையை யாவரும் மெச்சினார்கள். ஆனால், மனிதர்களுடைய அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ளும்படி, தன்னுடைய சாட்சியை இழந்து போனதை அவன் உணராதிருந்தான். உலக ஸ்நேகமுள்ளவனாக இருந்தான். ஆனால், மற்றவனோ, இந்த உலகத்தாரால் நிராகரிக்கப்பட்டான். ஊரோடு ஒத்தோடத் தெரியாதவன் என்று அவனை கேளிசெய்தார்கள். உலகத்தால் பகைக்கப்பட்டான். ஆனாலும், அவனோ, மனிதர்களுக்கு பிரியமாக இருப்பதைவிட, ஆண்டவர் இயேசுவுக்கு பிரியமாக இருப்பதையே தெரிந்து கொண்டான். பிரியமானவர்களே, "நீங்கள் உலகத்தாராயிருந்தால், உலகம் தன்னுடையதைச் சிநேகித்திருக்கும் நீங்கள் உலகத்தாராயிராதபடியினாலும், நான் உங்களை உலகத்திலிருந்து தெரிந்துகொண்டபடியினாலும், உலகம் உங்களைப் பகைக்கிறது." என்று ஆண்டவராகிய இயேசு கூறியிருக்கின்றார். எனவே, இந்த உலகத்தினால் உண்டாகும் அழுத்திற்கு உங்களை ஒப்புக் கொடுக்காதிருங்கள். மனிதர்கள் முன்னிலையிலே உங்கள் நற்சாட்சியை காத்துங் கொள்ளுங்கள்.

**யோவான் 15:19**

**நீங்கள் உலகத்தாராயிருந்தால், உலகம் தன்னுடையதைச் சிநேகித்திருக்கும்;**

**ஜெபம்**: உலகத்திற்கு வெளிச்சமாக இருக்கும்படி என்னை அழைத்த தேவனே, இருளின் அதிகாரத்திற்கு உட்பட்ட களியாட்டங்களுக்கு நான் இடங்கொடாமல், என் நற்சாட்சியை காத்துக் கொள்ள கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழி யாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# வாழ்வடையும் வழி

ஆண்டவராகிய இயேசு உயிர்தெழுந்தார் என்ற செய்தியை, அந்நாளிலிருந்த பிரதான ஆசாரியன் அறிந்த போது, மூப்பர்களோடு, ஆலோசனைபண்ணி, சேவகருக்கு வேண்டிய பணத்தைக் கொடுத்து:"நாங்கள் நித்திரைபண்ணுகையில், அவனுடைய சீஷர்கள் இராத்தி ரியிலே வந்து, அவனைக் களவாய்க் கொண்டுபோய்விட்டார்கள் என்று சொல்லுங்கள். இது தேசாதிபதி க்குக் கேள்வியானால், நாங்கள் அவரைச் சம்மதப்படுத்தி, உங்களைத் தப்புவிப்போம் என்றார்கள். அவர்கள் பணத்தை வாங்கிக்கொண்டு, தங்களுக்குப் போதிக்கப்பட்டபடியே செய்தார்கள்." (மத்தேயு *28:12-15*). இப்படிப்பட்ட ஆலோசனையை குறித்து என்ன கூறமுடியும்? அது நல் ஆலோசனையல்ல, தங்கள் குற்றங்களை மறைத்து, தங்கள் கொள்கைகளை உறுதிப்படுத்தும்படிக்கு, தங்களுக்கு கேடுண் டாக்கும் பொய் சாட்சிகளை ஏற்படுத்தி, துர்ஆலோசனை பிணைக்கின்றவர்களாக இருக்கின்றார்கள். அதனால், அவர்களுடைய வஞ்சகத்தினால், தேவ ஆலோசனை அபத்தமாகிற்றோ? இல்லை! அவர்களுடைய மதியீனத்தினால், தேவ காரியங்கள் தடைபட்டுப் போயிற்றோ? ஒரு போதும் இல்லை. தேவனாகிய கர்த்தர் சகலத்தையும் செய்ய வல்லவர். அவர் செய்ய நினைத்தது ஒருபோதும் தடைபடாது. அன்று ஆண்டவர் இயேசுவை எதிர்த்து நின்றவர்கள் பிணைத்த அந்தப் பொய்யான பேச்சு இந்நாள்வரைக்கும் ஒரு சிலர் மத்தியிலே பிரசித்தமாயிருக்கிறது. ஆனால், ஆண்டவர் இயேசுவை அறிந்திருக்கின்ற நாம், நம்முடைய வீட்டிலும், சபையிலே சகோதரர் மத்தியிலும் நம்முயை குற்றங்களை மறைப்பதற்கு ஆதரவுளை தேடாதபடிக்கு எச்சரிக்கையுள்ளவர்களாக இருக்க வேண்டும். இன்று விசுவாசிகள் மத்தியிலே, "நாங்கள் உங்களை சேர்ந்தவர்களாக இருப்போம், அது போல நீங்களும், எங்களுடைய குறைகளை நியாயப்படுத்துவதற்கு ஆதராவயிருங்கள்" என்று சிலர் வாழ்ந்து கொள்கின்றார்கள். அதனால், அவர்கள் சில மனிதர்கள் முன்னிலையிலே நீதிமான்களைப் போல காணப்படலாம். இவர்கள் தங்கள் குறைகளை அறிக்கை பண்ணிவிட்டுவிட மனதில்லாததால், தங் கள் குறைகளை உணர்த்த நியமிக்கப்பட்டவர்களை குற்றவாளிகள் என்று தீர்த்துவிடுகின்றார்கள். நாமோ அப்படியாக வாழாமல், இரக்கத்தை பெறும்படி மனந்திரும்பும் இருதயமுள்ளவர்களாக வாழ்வோமாக.

**நீதிமொழிகள் 28:13**

**தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடையமாட்டான்; அவைகளை அறிக்கை செய்து விட்டுவிடுகிறவனோ இரக்கம் பெறுவான்.**

**ஜெபம்:** சகலமும் அறிந்த தேவனே, நான் சுயநீதியுள்ளவனாக வாழாமல், உம்முடைய ஆலோசனைகளை ஏற்றுக் கொண்டு, மனம்திரும்பி, நீர் விரும்பும் நீதிமானாக வாழ உணர்வுள்ள இருதயத்தை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# பார்வையும் சிந்தையும்

ஒரு பிள்ளையானவன் பாடசாலைக்கு சென்று கற்பிக்கப்படும் பாடங்களை கற்பதற்கு வேண்டிய ஒழுங்குகள் யாவையும் அவனுடைய பெற்றோர் அவனுக்கு ஏற்படுத்திக் கொடுத்திருந்தார்கள். அதுமட்டுமல்லாமல், இன்ரநெற்றை எதற்காக உபயோகிப்பது, அதில் எதைப் பார்க்க வேண்டும், எதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும் என்று திட்டமாகவும் தெளிவாகவும் அவனுக்கு கூறியிருந்தார்கள். அந்த பிள்ளையானவனுடைய வாழ்க்கையிலே யாவும் ஒழுங்காகவும் கிரமமாகவும் நடைபெற்றுக் கொண்டிருந்து. ஒருநாள் அவனுடைய சக மாணவர்களிலொருவன் இன்ரநெற்றிலுள்ள வீடியோ பதிவொன்றை பார், மிகவும் சுவாரசியமானது என்று எழுதி அனுப்பியிருந்தான். அதற்கு அவன் மறு மொழியாக: என் பெற்றோர் இவைகளை பார்க்க வேண்டாம் என்று கூறியிருக்கின்றார்கள் என்று எழுதினான். அந்த சகமாணவனானவன்: தொழில்நுட்பத்தை குறித்து உன் பெற்றோருக்கு எல்லாம் தெரியம் என்றல்ல. இதை சும்மா பார், எந்த தவறுமில்லை என்று அறிவுரை கூறினான். அந்தப் பிள்ளையானவனும் சகமாணவர்களுடைய உந்துதலினாலே அந்த வீடியோ பதிவை பார்த்தான். ஒன்றின்பின் ஒன்றாக மற்றய பதிவுகளை பார்க்க ஆரம் பித்தான். தற்போது அவன் மனதிலே, பல ஆசைகள், பெற்றோரின் ஆலோசனையை குறித்து வெவ்வேறான எண் ணங்களும் தோன்ற ஆரம்பித்து விட்டது. இவ்வண்ணமாகவே இன்று சில விசுவாசிகளின் மனநிலைகளும் மாறிப்போய்விடுகின்றது. தேவனை அறிகின்ற அறிவில் வளரும்படிக்கு தேவையான யாவற்றையும் அவர்கள் அறிந் திருந்தாலும், வாழ்க்கையில் பரபரப்பு இல்லை என்று எண்ணி, இன்நெற் ஊடகங்களிலே, தங்கள் பார்வையிலே தீமையில்லாத காரியங்கள் இன்னதென்று தீர்மானம் செய்து கொண்டு, அவைகள் தங்கள் மனதிலே குடி கொள்வதற்கு இடங் கொடுக்கின்றார்கள். நாளடைவிலே ஒன்றின்பின் ஒன்றாக பல காட்சிகளை பார்த்து, பல தத்துவங்களை கேட்டு, பரிசுத்தத்தை குறித்து உணர்வற்றவர்களாக மாறிவிடுகின்றார்கள். இதனால் தமது வாழ்வில் கனியற்றநிலையை அடைந்து விடுகின்றார்கள். ஆதியிலே ஏவாள் தேவனுடைய தெளிவானதும் இலகுவானதுமான ஆலோசனையை மீறி, பிசாசானவனோடு சம்பாஷனை செய்ததால் அவள் மனநிலை மாறிப் போய் விட்டது. எனவே, நாமும் வஞ்சிக்கப்பட்டு போய்விடாதபடிக்கு தேவ வார்த்தையிலே நிலைத்திருப்போமாக.

**நீதிமொழிகள் 4:25**

**உன் கண்கள் நேராய் நோக்கக்கடவது; உன் கண்ணிமைகள் உனக்கு முன்னே செவ்வையாய்ப் பார்க்கக்கடவது**

**ஜெபம்**: அன்பின் தேவனே, என் காலைத் தீமைக்கு விலக்கி காத்துக் கொள்ளும்படிக்கு, வலது புறமும் இடது புறமும் சாயாமல், உம்முடைய வார்த்தையிலே நிலைத்திருக்க உணர்வுள்ள இருதயத்தை தந்து வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# சத்திய வார்த்தையில் நிலைத்திருங்கள்

ஆண்டவராகிய இயேசு திபேரியாக்கடல் என்னப்பட்ட கலிலேயாக் கடலின் அக்கரைக்குப் போனார். அவர் வியாதிக்காரரிடத்தில் செய்த அற்புதங்களைத் திரளான ஜனங்கள் கண்டபடியால் அவருக்குப் பின் சென்றார்கள். அந்த ஜனத்திரளிலே, புருஷர்கள் மாத்திரம் ஏறக்குறைய ஐயாயிரம் பேராயிருந்தார்கள். அந்நாளிலே, அவருக்கு பின்சென்றவர்கள் ஆண்டவர் இயேசுவின் உபதேசங்களை கேட்டார்கள், அநேக அற்புதங்களை கண்டார்கள், மேலும் ஐந்து வாற்கோதுமை அப்பங்களும் இரண்டு மீன்களும் பலுகிப்பெருகப் பண்ணி அங்கிருந்த யாவரும் திருப்தியாக உண்ணும்படி செய்தார். இயேசு செய்த அற்புதத்தை அந்த மனுஷர் கண்டு: மெய்யாகவே இவர் உலகத்தில் வருகிறவரான தீர்க்கதரிசி என்று கூறி, அவரை ராஜாவாக்கும்படி மனதாயிருந்தார்கள். அவர்களுடைய உண்மையான மனநிலைமையை அறிந்த ஆண்டவராகிய இயேசு, அதை அவர்களுக்கு வெளிப்படுத்தினார். "அழிந்துபோகிற போஜனத்திற்காக அல்ல, நித்திய ஜீவன்வரைக்கும் நிலைநிற்கிற போஜனத்திற்காகவே கிரியை நடப்பியுங்கள்" என்று நித்திய வாழ்வு தரும் சத்திய வார்த்தைகளை அவர்களுக்கு எடுத்துக் கூறினார். ஆனால், அவர்கள் சத்தியமான வார்த்தைகளை கேட்டபோது, அதை ஏற்றுக் கொள்ள மனதில்லாமல், அநேகர் அவரைப் விட்டு பின்வாங்கிப் போனார்கள். அது மட்டுமல் லாமல் ஆண்டவராகிய இயேசுவினிடத்தில் குற்றத்தை கண்டு பிடிக்கும் படி அவரோடு வாக்குவாதம் பண்ணினார்கள். அவருடைய பன்னிரண்டு சீஷர்கள் அவருடனேகூட இருந்தார்கள். அந்த பன்னிரண்டு சீஷர்களில் ஒருவன் பிசாசாயிருந்தான். (யோவான் 6:1-71). பாருங்கள், சத்திய வார்த்தைகளை கேட்க மனதில்லாமல் எத்தனையோ ஆயிரக்கணக்கான மனுஷர்கள் ஆண்டவர் இயேசுவை விட்டு பின்வாங்கிப் போனார்கள். இன்றும்கூட, அற்புத அடையாளங்களை காணவும், விருந்து உபசாரங் களை அனுசரிக்கவும்அநேகர் சந்தோஷத்தோடேகூடி வருகின்றார்கள். ஆனால், சத்திய வார்த்தைகளை சுத்தமாய்ப் பேசும் போது, அவர்களில் அநேகர் கோபமடைந்து அவ்விடம் விட்டு அகன்று போனால் ஆச்சரி யப்படாதிருங்கள். எண்ணிக்கையைக் குறித்து அதிக கவனம் செலுத்தாமல், ஆண்டவர் இயேசுவின் சத்திய வார்த்தையில் நிலைத்திருங்கள்.

**யோவான் 15:7**

**நீங்கள் என்னிலும், என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால், நீங்கள் கேட்டுக்கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும்.**

**ஜெபம்:** அன்பின் பரம தந்தையே, நான்; எல்லா ஞானத்தோடும், ஆவிக்குரிய விவேகத்தோடும், சத்திய வார்த்தையிலே நிலைத்திருந்து, உம்முடைய சித்தத்தை அறிகிற அறிவினாலே நிரப்பப்பட எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# வாக்குரைத்தவர் உண்மையுள்ளவர்

கர்த்தருடைய வாக்குத்தத்தங்கள் எங்கே? என் வாழ்விலே ஆசீர்வாதங்கள் எங்கே? எண்ணிக்கையின் பெருக்கம் அர்த்தமற்றதாக இருக்கின்றதே என்று மனக் குழப்பத்தோடு வாழும் விசுவாசியே, கர்த்தருக்கு காத்திரு! ஆபிரகாம் என்னும் மனிதனை கர்த்தர் அழைத்த போது, அவனுக்கு ஒரு பிள்ளைகூட இல்லை. அவனும் அவனுடைய மனைவி சாராளும் வயது முதிர்ந்தவர்களாக இருந்தார்கள். அந்த நிலைமையிலே, கர்த்தர் அவனை நோக்கி: நான் உன்னை பெரிய ஜாதி யாக்குவேன். வானத்து நட்சத்திரங்களைப் போல உன் சந்ததியைப் பெருகப்பண்ணுவேன். கடற்கரை மணலைப் போல உன் சந்ததி இருக்கும் என்று வாக்களித்தார். கர்த்தர் அவனை அழைத்து *25* ஆண்டுகள் சென்ற பின்னரும், எண்ணிக்கையிலே எந்தப் பெருக்கமும் இல்லை. அவனுடைய வயதும், அவன் மனைவியுடை வயதும் பெருகி இருந்தததது. கர்த்தருடைய வாக்குத்தத்தத்திற்கும், ஆபிரகாமுடைய சந்ததியின் எண்ணிக்கைக்கும் எந்த தொடர்போ அர்த்தமோ தெரியாதிருந்த நிலைமையாக இருந்தது. ஆனால், கர்த்தர் முன்குறித்த நேரத்திலே ஒன்றுமில்லாத எண்ணிக்கை ஒன்றாக கூடியது. ஆனால், இன்று அந்த வாக்குத்தத்தத்தை தியானித்துப் பாருங்கள்! கர்த்தர் கூறிய வார்த்தைகள் ஒன்றும் தவறிப் போவதில்லை (யோசுவா *21:45*). அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத் தெரிந்து கொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமுமானவர்களே, உங்கள் தற்போதைய சூழ்நிலைகளைக் கண்டு சோர்ந்து போகாதிருங்கள்! நல்ல போர்ச் சேவகனைப் போல, உங்கள் அறிக்கையிலே உறுதியாய் நிலைத்திருங்கள். அழைத்தவர் உண்மையுள்ளவராக இருக்கின்றார். உலக போக்கில் வாழ்பவர்களின் வாழ்க்கையை கண்டு எரிச் சலடையாதிருங்கள். பொல்லாதவர்களின் செழிப்பைக் கண்டு சோர்ந்து போதிருங்கள். பூமிக்கு உப்பும், உலகத்திற்கு வெளிச்சமுமானவர்களே, நன்மை செய்வதிலே சோர்ந்து போகாதிருங்கள். மகிமையின் நம்பிக்யைாக கிறிஸ்து உங்கள் இருதயங்களில் வாசம் செய்கின்றார். அணையாத தீபமாக அவரே உங்கள் மனக் கண்களை பிரகாசமடையச் செய்வாராக.

**2 கொரிந்தியர் 1:20**

**தேவனுடைய வாக்குத்தத்தங்களெல்லாம் இயேசுகிறிஸ்துவுக்குள் ஆம் என்றும், அவருக்குள் ஆமென் என்றும் இருக்கிறதே.**

**ஜெபம்:** என் பெலனான, தேவனாகிய கர்த்தாவே, என் வழியைக் உம்மிட த்தில் ஒப்புவித்து, உம்மாலே காரியம் வாய்க்கும் என்று நம்பிக்கையோடு, உம்மில் மனமகிழ்சியாயிருக்க, என்னை பெலப்படுத்தி நடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# நன்மை செய்வதில் ஓய்ந்து போகாதிருங்கள்

ஒரு சமயம், கர்த்தராகிய இயேசு எருசலேமுக்குப் பிரயாணம்பண்ணு கையில், அவர் சமாரியா கலிலேயா என்னும் நாடுகளின் வழியாக நடந்துபோனார். அவர் ஒரு கிராமத்தில் பிரவேசித்தபோது, குஷ்டரோக முள்ள மனுஷர் பத்துப்பேர் அவருக்கு எதிராக வந்து, தூரத்திலே நின்று: இயேசு ஐயரே, எங்களுக்கு இரங்கும் என்று சத்தமிட்டார்கள். அவர்களை அவர் பார்த்து: நீங் கள் போய், ஆசாரியர்களுக்கு உங்களைக் காண்பியுங்கள் என் றார். அந்தப்படி அவர்கள் போகை யில் சுத்தமானார்கள். அவர்க ளில் ஒருவன் தான் ஆரோக்கிய மானதைக் கண்டு, திரும்பிவந்து, உரத்த சத்தத்தோடே தேவனை மகிமைப்படுத்தி, அவருடைய பாதத்த ருகே முகங்குப்புற விழுந்து, அவருக்கு ஸ்தோத்திரஞ்செலுத்தினான். அவன் சமாரியனாயிருந்தான். அப்பொழுது இயேசு: சுத்தமானவர்கள் பத்துப்பேர் அல்லவா, மற்ற ஒன்பதுபேர் எங்கே? தேவனை மகிமை ப்படுத்துகிறதற்கு, இந்த அந்நியனே ஒழிய மற்றொருவனும் திரும்பி வரக்காணோமே என்று சொல்லி, அவனை நோக்கி: நீ எழுந்துபோ, உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது என்றார். ஆம் பிரியமானவர் களே, பத்து பேரில் ஒருவன் மாத்திரம் நன்றியுள்ளவனாக இருந்தான். உங்கள் வாழ்க்கையிலும், அநேகருக்கு அவர்கள் சிறுமைப்பட்ட நாட்க ளிலே, நீங்கள் ஆதரவாக இருந்து, பல உதவிகளை செய்திரு க்கலாம். அவர்கள் வளர்ந்து பெருகும் போது, நீங்கள் செய்த நன்மைகளை அவர்கள் மறந்து போய்விட்டால், அதைக் குறித்து ஆச்சரிப்படுகி ன்றீர்களா? உங்கள் வாழ்க்கை யிலே இலக்கங்களும் எண்ணிக்கைக ளும் அர்த்தமற்றதாக இருக்கும் போது, அதைக்குறித்து நொந்து கொள் ளாதிருங்கள்! நீங்களோ, ஆண்டவர் இயேசுவின் நாமத்திலே, பிதா வாகிய தேவனுடைய நாமம் மகிமைப்படும்படி நன்மைகளை நடப்பித்து வருகின்றீர்கள். அவ்வண்ணமாக அவரையே நம்பி தொடர்ந்து நன்மை செய்யுங்கள்! மற்றவர்களுடைய வாழ்க்கையிலே நன்மையானவைகளை விதைப்பதில் ஓய்ந்து போகாதிருங்கள். “உங்கள் சத்துருக்களைச் சிநே கியுங்கள், நன்மை செய்யுங்கள், கைம்மாறுகருதாமல் கடன் கொடு ங்கள், அப்பொழுது உங்கள் பலன் மிகுதியாயிருக்கும், உன்னத மான வருக்கு நீங்கள் பிள்ளைகளாயிருப்பீர்கள், அவர் நன்றியறியா தவர்க ளுக்கும் துரோகிகளுக்கும் நன்மைசெய்கிறாரே.” பரலோகிலே பலன்களின் எண்ணிக்கை அதிகதிகமாயிருக்கும்.

**லூக்கா 6:35**

**அவர் நன்றியறியாதவர்களு க்கும் துரோகிகளுக்கும் நன் மைசெய்கிறாரே.**

**ஜெபம்**: என்னை அழைத்த தேவனே, நீர் கட்டளையிடப்பட்ட யாவற்றை யும் செய்தபின்பு: நான் அப்பிரயோஜனமான ஊழியக்காரன், செய்ய வேண் டிய கடமையைமாத்திரம் செய்தேன் என்ற மனதோடு வாழ என க்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# எண்ணற்ற பாரங்கள்?

அப்பொழுது கிதியோன் கர்த்தருடைய தூதனை நோக்கி: "ஆ என் ஆண்டவனே, கர்த்தர் எங்களோடே இருந்தால், இவையெல்லாம் எங்க ளுக்கு நேரிடுவானேன்? கர்த்தர் எங்களை எகிப்திலிருந்து கொண்டுவர வில்லையா என்று எங்கள் பிதாக்கள் எங்களுக்கு விவரித்துச்சொன்ன அவருடைய அற்புதங்களெல்லாம் எங்கே? இப்பொழுது கர்த்தர் எங் களைக் கைவிட்டு, மீதியானியர் கையில் எங்களை ஒப்புக்கொடு த்தாரே" என்றான். அப்பொழுது கர்த்தர் அவனை நோக்கிப்பார்த்து: உன க்கு இருக்கிற இந்தப் பலத் தோடே போ. இரட்சிப்பு உன்னால் உண்டாகும், உன்னை அனுப்பு கிறவர் நான் அல்லவா என்றார். அதற்கு அவன்: ஆ என் ஆண்டவரே, நான் என் ஜனத்தை எதினாலே ரட்சி ப்பேன் இதோ, மனாசேயில் என் குடும்பம் மிகவும் எளியது. என் தக ப்பன் வீட்டில் நான் எல்லாரிலும் சிறியவன் என்றான். கிதியோனின் மனதின் ஆதங்கத்தை சற்று சிந்தி த்துப் பாருங்கள். துன்பங்கள் எண் ணிக்கை அதிகம். எதிரிகளின் பெலன் அதிகம், தானே பெலனற்றவனும் எல்லாரிலும் சிறியவனுமாயிருக்கின்றேன் என்றான். அவனுடைய பார் வையிலே எதிரிகளின் இலக்கத்திற்கும், எண்ணிக்கைக்கும், தன்னிட முள்ள பெலத்திற்கும் தொடர்பே இல்லை என்று எண்ணிக் கொண்டான். ஆனால், கர்த்தரோ, அவனோடுகூட முந்நூறு பேரை தெரிந்து கொண்டு, எண்ணிக்கையிலும், பெலத் திலும் அதிகமாகயிருந்த எதிரியின் படைகளை ஒரே இராத்திரியிலே முறியடிக்க கிருபை செய்தார். பிரிய மான சகோதர சகோதரிகளே, ஒரு வேளை சந்தர்ப்ப சூழ்நிலைகள் காரணமாக, நீங்களும் கிதியோனைப் போல மனம் நொந்திருக்கலாம். கர்த்தருடைய பெலன் கடந்த காலத்திற்குரியதும், அவருடைய அற்புத அதிசயமான செயல்கள் பூர்வீகத்திற்குமுரியது என்று உங்கள் பெல வீனத்தில் நீங்கள் எண்ணிக் கொள்ளலாம். நீங்கள் பயப்படுகிற நாளில் கர்த்தலை நம்புங்கள். உங்கள் அலைச்சல்களை தேவரீர் எண்ணியிரு க்கின்றார். உங்கள் கண்ணீரை தம்முடைய துருத்தியில் சேர்த்து வைத் திருக்கின்றவர் அவைகளை தம்முடைய கணக்கில் வைத்திருக்கின்றார். எனவே, உங்களை சுற்றிசூழும் எண்ணற்ற பாரங்களை கண்டு சோர்ந்து போகாமல், எண்ணிலடங்கா நன்மைகளை செய்யும் கர்த்தரை நோக்கிப் பாருங்கள். கரை நோக்கி வரும் அலைகள் மறுமபடியும் கடலுக்குள் செல்வது போல, உங்கள் வாழ்வை நோக்கி வரும் துன்பங்கள் துயரங்களை கர்த்தர் நீக்கிப் போடுவார்.

**நியாயாதிபதிகள் 6:14**

உனக்கு இருக்கிற இந்தப் பலத்தோடே போ;

**ஜெபம்**: என் பட்சத்தில் இருக்கும் தேவனே, யோர்தான் புரண்டு வரும் போல், பல சவால்கள் என்னை நோக்கி வந்தாலும், அவை ஒவ்வொ ன்றையும் நான் மேற்கொள்ள நீர் உதவி செய்து வருவதற்காக நன்றி. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# அசையாத நம்பிக்கை

பொருளாதாரத்தின் பெருக்கமானது மனிதனை இரட்சிக்கக் கூடுமோ? படைபலம் ஒரு ராஜ்யத்தை காக்கக்கூடுமோ?இன்றைய உலகிலே பெரும்பான்மையான மனிதர்கள் தங்கள் பொருளாதார நிலைமையை மேம்படுத்தும்படி அயராது உழைக்கின்றார்கள். அந்த நிலைமையை அடைவதே முதன்மையானதென பிள்ளைகளு க்கும் கற்றுக் கொடுகின்றார்கள். அப்படியாக அயராது உழைக்கும் மனிதர்க ளில் சிலர் அந்த நிலைமையை அடைகின்றார்கள். ஆனால், அவர் கள் அடைந்து கொள்ளும் வள ர்ச்சி அவர்களுக்கு மனத்திருப் தியை கொடுப்பதில்லை. மாறாக அவர்கள் பொருளாசைக்குள் தாங்கள் சிக்கிக் கொண்டதை உணராமல் இன்னும் அதிகம் வேண்டும் என்று நாடித் தேடுகின்றார்கள். அதுவே அவர்களின் நம்பிக்கையாக மாறி விடுகின்றது ஆனால் ஆபத்து நாட்களிலும், இடுக்கண் சூழ்ந்து கொள்ளும் போதும், அவை அவர்களை விடுவிப்பதில்லை.“தங்கள் செல் வத்தை நம்பி தங்கள் திரளான ஐசுவரியத்தினால் பெருமை பாராட் டுகிற, ஒருவனாவது, தன் சகோதரன் அழிவைக் காணாமல் இனி என் றென்றைக்கும் உயிரோடிருக்கும்படி, எவ்விதத்தினாலாவது அவனை மீட்டுக்கொள்ளவும், அவனிமித்தம் மீட்கும் பொருளை தேவனுக்குக் கொடுக்கவுங் கூடாதே. அவர்கள் ஆத்துமமீட்பு மிகவும் அருமையாயி ருக்கிறது. அது ஒருபோதும் முடியாது. ஞானிகளும் மரித்து, அஞ் ஞானிகளும் நிர்மூடரும் ஏகமாய் அழிந்து, தங்கள் ஆஸ்தியை மற்ற வர்களுக்கு வைத்துப் போகிறதைக் காண்கிறான். தங்கள் வீடுகள் நித்தியகாலமாகவும், தங்கள் வாசஸ்தலங்கள் தலை முறை தலை முறையாகவும் இருக்குமென்பது அவர்கள் உள்ளத்தின் அபிப்பிராயம் அவர்கள் தங்கள் நாமங்களைத் தங்கள் நிலங்களுக்குத் தரிக்கிறார்கள். ஆகிலும் கனம் பொருந்தியவனாயிருக்கிற மனுஷன் நிலைத்திருக்கிற தில்லை. அழிந்து போகும் மிருகங்களுக்கு ஒப்பாயிருக்கிறான்.” (சங்கீ தம் 49:6-12). கர்த்தர் வீட்டைக் கட்டாராகில், அதைக் கட்டுகிறவர்களின் பிரயாசம் விருதா. கர்த்தர் நகரத்தைக் காவாராகில் காவலாளர் விழி த்திருக்கிறது விருதா. (சங்கீதம் 127:1-2) சிலர் இரதங்களைக் குறித்தும், சிலர் குதிரைகளைக்குறித்தும் மேன்மைபாராட்டுகிறார்கள் நாங்களோ எங்கள் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தைக்குறித்தே மேன்மை பாராட்டுவோம். (சங்கீதம் 20:7)

**சங்கீதம் 33:20**

**நம்முடைய ஆத்துமா கர்த்தருக்குக் காத்திருக்கிறது; அவரே நமக்குத் துணையும் நமக்குக் கேடகமுமானவர்.**

**ஜெபம்**: மேலானவைகளை நாடுங்கள் என்று கூறிய தேவனே, நிலையற்ற உலகத்தின் அழிந்து போகும் பொக்கிஷங்களை நாடித் தேடாமல், உமக்கு பயந்து உம்முடைய வழியிலே நடக்க உணர்வுள்ள இருதயத்தை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.